# திராவிடநாடு

22—12—57 | வார வெளியீடு | விலை 16 காசு


## தீரர் கோட்டமே!

—[பகலவன்]—

விழிதரு கதிரவன் ஒளிதரப் புறப்படும்
பொழுதினில் எழுந்துநான் பொலிவுடன் நடந்தேன்
ஊரின் ஓரத்தில் ஒப்பிலாக் குளத்தில்
தாமரை மலரவும் தருமணம் கமழவும்
சுரும்பினம் ஒலித்திடும் சுவைக்கும் காட்சிகள்
தினமும் காணச் செல்லும் அங்கே!
இன்றும் சென்றேன் வண்டுகள் அழுதன!
குரும்புடைச் சிறுவனின் எருமை ஒன்று
பூத்திட இருக்கும் பூக்களைப் பறித்து
தின்றுமே திரிவதால் தெளிந்தநீர் கலங்கக்
கண்டேன், துன்பம் மண்டிடத் துடித்துக்
கல்லினால் விரட்டினேன் கடிந்துஅச் சிறுவனை
"மடையனே! இதுவா மாண்புள செயலோ?"
என்று கேட்டால் சின்னவன் சிரித்தான்;
சிந்தனை துலங்கவே திரும்பினேன்; நடப்பவை
இதுதான் நாட்டில்! என்மனம் குமுறியது!
வளமும் நல்லதோர் இலக்கண இலக்கிய
நலமிலா மொழியாம் நாடோடி இந்தியை
அரசுடை மொழியாய் ஆக்கிடத் துடித்திடும்
வடபுல வெறியர், வண்டமிழ் குலுங்கும்
தென்னகம் சிதையவே திணிக்கிறார் திரைமறைவில்
என்றுமே முடியாது! எண்ணமும் பலிக்காது!!
சிங்கங்கள் வாழும் செந்தமிழ் திருவிடத்தை
யார்தான் வென்றார்? பார்ப்போம் வாருங்கள்;
காவலரும் நாவலரும் காட்டுநல் வழிசெல்ல
தீரர் கோட்டமே! திரண்டெழு!! புறப்படு!!!

# கேட்டீரா சேதி!

பாலைவனத்தைச் சோலைவனமாக்கி வருகிறது ருசியா! அதற்கு உதவி புரிகிறது ஜப்பான்!! ஆச்சரியமடைவீர்கள், உலகத்திலேயே மிகப் பெரிய வல்லரசான ருசியாவுக்கா, ஜப்பான் உதவி செய்கிறதென்று. ஆமாம், ருசியாவின் கிழக்குப் பகுதியான சைபீரியா, ஜப்பானுக்குப் பக்கத்திலிருப்பதால், தேவையான தொழில் சாதனங்களை இங்கிருந்தே பெற்றுக் கொள்வதென ருசிய சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்; இதற்கான ஒப்பந்தம் கடந்த 13ந் தேதி, ஜப்பானியத் தலைநகரில், இருநாடுகளுக்குமிடையே நடந்துவிட்டது.

*

பாம்பும் பசுவும் ஒன்றுதான்! —என்று சொன்னால், உங்களிலே பலர் சண்டைக்கு வரக்கூடும். சென்ற கிழமை புது டில்லியில்சொற்பொழிவாற்றிய பிரபல விஞ்ஞானி ஜே. பி. எஸ். ஹால்டன் என்பவர், இரண்டும் ஒன்றுதான் என்று விளக்கியிருக்கிறார். நீர் வாழும் பூச்சியிலிருந்து 'ஊர்வன'வாகிப் பிறகு குரங்காகி, அதன்பிறகு 'மனிதன்' தோன்றினான் என்பது தானே டார்வின் சித்தாந்தம். இதன்படி பார்த்தால், பசு என்கிற பிராணிக்கும் பாம்புக்கும்—ஏன்? மனிதனுக்கும் கூட—மூதாதை ஒரே ஒரு பொருள் தான்! அதிலிருந்துதானே, இன்றைய பிராணி வர்க்கங்களும், மனித வர்க்கமும், விரிவடைந்திருக்கின்றன. அதை விளக்கும்போதுதான், இந்தப் பேரறிஞர், இரண்டும் ஒன்றே என்று சொன்னாராம். ஒரே இடத்திலிருந்து பல கட்டங்களைத் தாண்டியிருந்தாலும், பசுவுக்கும் பாம்புக்கும் குணங்களில் தான் எவ்வளவு வேற்றுமைகள்! கேவலம், பகுத்தறிவில்லாத 'ஜந்து'களிருக்கட்டும்-'பரிணமவாதக் கொள்கை'ப்படி கடைசிக்கட்டமான மனிதனிடத்திலும் தான் எவ்வளவு வேற்றுமைகளும், வேதனைகளும் இருக்கின்றன? யாவரும் ஒரேமனித இனம் என்கிற உத்தமநெறி, பகுத்தறிவுமிக்க மனிதனிடமாவது உள்ளதோ? இல்லையே!!

*

இருதயம், மூளை — இரண்டு இடங்களிலும் 'ஆபரேஷன்' செய்வது ஆபத்தானதாகும்! இருதய ஆபரேஷன் போதும், மூளையை அறுக்கும்போதும் இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டால் நோயாளி சாவதைத் தவிர வேறு வழி கிடையாது. இதனால், இந்த ஆபரேஷன்களை எப்படிச் செய்வது என்பது, சமீபகாலம் வரையில் பெரும் தலைவலியாயிருந்தது. 'மூளை' விஷயத்தில் வெற்றி காணப்பட்டுள்ளதாம் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில். சமீபத்தில் ஒரு டஜன் பேருக்கு மேல், இந்தஆபரேஷன் வெற்றிகரமாகச் செய்யப்பட்டதாம். இந்தியத் துணைக்கண்டத்திலேயே, இச்சாதனையைச் செய்து வெற்றி கண்ட முதலிடம் சென்னைதானாம்! விரைவில், இருதய ஆபரேஷனும் செய்யப்படுமாம். இந்த முறைப்படி, நோயாளிக்கு முதலில் மயக்க மருந்து தரப்படுமாம். பிறகு 'ஐஸ்' வைத்துச் சுற்றிலும் மூடி, நோயாளியினுடைய இரத்த அழுக்கத்தைக் குறைப்பார்களாம். பிறகு, ஆபரேஷன் நடக்குமாம்.

*

"ஐயா! மழையாலும் வெள்ளத்தாலும்தவிக்கிறோம். அதற்காக ஒரு ஆறு இலட்சம் ரூபாய் கடனும், $3\frac{1}{2}$ லட்ச ரூபாய் உதவியும் கொடுங்கள்," என்று கேரள சர்க்கார், டில்லியைக் கெஞ்சிற்று இந்த உதவி கொடுக்கப்பட்டதா, என்று பார்லிமெண்டில் 17-ந் தேதி ஒரு உறுப்பினர் கேட்க, டில்லி மந்திரி பகத், 'இல்லை' என்று இரத்தினச் சுருக்கமாகப் பதிலளித்துவிட்டார். 6 லட்சம் கடன்! $3\frac{1}{2}$ லட்சம் உதவி!!— இதைக்கூட மறுக்கிறது, டில்லி. ★

# திராவிட முன்னேற்றக் கழகம்

## பொதுக்குழு கூட்ட அழைப்பு

அன்புடையீர்!

வணக்கம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுக் கூட்டம் **29—12—57** ஞாயிறு காலை **10**-மணிக்கு நாகர் கோவில் கோட்டாறு பகுதியில், குமார் ரைஸ் மில்லில் நடைபெறும். தாங்கள் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

### ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுபவை

1. பொதுத் தேர்தல்—வரவு செலவு
2. சட்டதிட்டத்தில் சில திருத்தங்கள்
3. பொதுச் செயலாளரால் கொண்டுவரப்படும் இதர முக்கிய பொருள்கள்.

'அறிவகம்'
சென்னை-13
19-12-1957

அன்பன்,
**இரா. நெடுஞ்செழியன்**
பொதுச் செயலாளர்.

# நல்வழி

16]   ஆண்டு சந்தா ரூ. 8   [22—12—57]   தனிப் பிரதி 16-காசு   [இதழ் 23

"நாடு முழுதும் சாதி வெறி வெவ்வேறு உருவில் பரவியிருக்கவே செய்கிறது. காந்தியடிகளின் வழிவந்த நிர்மாண ஊழியர்கள் இனியும் இத்தகைய இழிசெயல்கள் நடைபெறுவதைப் பார்த்துக்கொண்டிருக்கலாமா?...நாட்டிற்கு நாம் காட்டும் பாதைதான் என்ன? சாதிப் பாகுபாட்டை ஒழிக்க இன்றைய இளைஞர்கள் ஆர்வமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு வழி காட்டுவதற்குத் தகுந்த தலைவர்கள் இல்லாததால்தான் நாடும் நாமும் விரும்பாத வழிகளில், வேண்டாத வழிகளில் அடியெடுத்து வைக்கிறார்கள்"—என்று வினோபா அடிகளின் 'கிராம ராஜ்யம்' எனும் ஏட்டில் தமிழ்நாடு சர்வோதயச் சங்கச் செயலாளர், ச. செகன்னாதன், உருக்கமும் வேதனையும் கலக்க எழுதியிருக்கிறார். இவர்போல, இந்த அரும்பெரும் பணியினைப் பற்றி, ஏக்கமும் துக்கமும் அடைவோர் ஏராளம்! சாதி ஒழிய வேண்டுமென்பதை மறுக்கும் அரசியல் கட்சிகள் எதுவும் நமது நாட்டில் கிடையாது. படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், எவரைக் கேட்டாலும், 'சாதி ஒழிய வேண்டும்' என்றே சொல்லுவார்கள். இருந்தும், நாட்டில் சாதி ஒழிந்ததா! இல்லை, இல்லை. செகன்னாதன், வாலிபர்கள் தயாராகயிருந்தும், சரியான தலைவர்கள் இல்லையே என்று குறைபடுகிறார். எந்தக் கூடாரத்தை அவர் குறிப்பிடுகிறார் என்பது சொல்லாமலே விளங்கும். கீழ்சாதியினர் என்று கருதப்படும் கூடாரத்திலே, சாதி யொழிப்பையே மூலாதாரம் எனக் கொண்டு பாடுபட்டவர்களும், பாடுபடுபவர்களும் பலருண்டு. பெரியார் அவர்களைப்போல சாதி ஒழிப்புப் பணியில் ஆர்வமும் வேகமும் கொண்ட தலைவர்கள் இருக்கிறார்கள்! பெரியாரின் பணி, சாதி ஒழிப்பு வகையில் எவ்வளவு பெரியது என்பதைச் சர்வோதயச் சங்கச் செயலாளரான இவரும் மறுக்கவில்லை. ஆனால், உயர் வகுப்பு என்று கருதப்படுகிற பார்ப்பன குலத்தில், இதுபோல சாதி ஒழிப்பில் ஆசை கொண்ட தலைவர்கள் இன்றுண்டா? பாரதியார், வ. ரா. போன்றவர்கள் முன்பு இருந்தார்கள்! இப்போது, விளங்கும் தலைவர்களில் யாராவது இருக்கிறார்களா எனின், ஏமாற்றமே பதிலாகக் கிடைக்கிறது.

சாதி ஒழிப்பில் ஆசைகொண்ட ஏராளமான இளைஞர்கள் பார்ப்பன வகுப்பில் இன்றைய தினம் இருக்கிறார்கள். ஆனால் அவர்களை முன்னின்று நடத்தி வந்து, பேத மொழிக்கும் பெரும்பணியில் சேர்த்துவிடும் வேலையில் ஈடுபடும் தலைவர்கள் இல்லை. சச்சிவோத்தமர், ஆச்சாரியார். போன்றோரும்: ஏடு நடத்தும் 'இந்து'வும் சுதேசமித்திரனும், இன்ன பிறவும், இந்தப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்தார்களேயானால் எவ்வளவு நன்றாயிருக்கும்? இவர்கள் எல்லாம் தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் நிறவெறி பற்றி பேசுவதையும் எழுதுவதையும் பார்க்கும்போது கனல் கிளம்பும்! ஆனால், நம் நாட்டின் பெருநோயான சாதிக் கொடுமையைக் கண்டும் காணாததுபோல் 'நமக்கென்ன' என்று இருந்து வருகிறார்கள்!!

பிரிட்டனில் தொழிற்கட்சியின் மேதைகளில் ஒருவராய் விளங்கியவர், கிரிப்ஸ். இந்திய சுதந்திரத்துக்கு ஆதரவு அளித்தவர் என்று அவரைக் கூறுவார்கள். தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் வெள்ளையர் — வெள்ளையரல்லாத பேதத்தை மிக மிகக் கண்டித்தவர். அப்படிப்பட்ட நல்லவருடைய திருமகள், தனது நாட்டுக்கும் உலகத்துக்கும் ஒரு வழிகாட்டியாகயிருக்கும் நோக்குடன் ஒரு நீக்ரோவையே திருமணம் செய்துகொண்டு காட்டினார்! அதுபோல, வெறும் வாய்ப்பேச்சோடு மட்டுமின்றி, உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் என்று யார் கருதப்படுகிறார்களோ, அவர்களே இந்த உத்தமச்செயலுக்கு வழிகாட்டுபவர்களாக அமைவார்களேயாயின், அதைவிடப் பெரும்பணி—தியாக சேவை, எதுவும் கிடையாது. அப்போது, பெரியார் அவர்களும், 'அது செய்வேன், இது நடக்கும்! என்று கூறுகிற கட்டமும் ஏற்படாது நாட்டில்!! தள்ளாத வயதில், இப்பொல்லாத பணியிலீடுபட்டிருக்கும், பெரியாருக்கு எவ்வளவு உற்சாகமும் உத்வேகமும் ஏற்படும்? அவருடைய வயதுக்குச் சரிசமமாக விளங்கும் பார்ப்பனக் குலப் பெரியவர்கள், தமது வாழ்நாட்களின், கடைசிக் கட்டத்தை; இம் மாபெரும் பணிக்கு ஏன் ஈடுபடுத்தக்கூடாது— எனும் பேராவல் காரணமாகவே, நாம் கடந்த சில ஆண்டுகளாக, **பார்ப்பன குலத் தலைவர்களையும் இந்த சாதி ஒழிப்புப் பணியில் அவர்களாகவே ஈடுபட்டு உழைக்கவேண்டும்** என்று வலியுறுத்தி வருகிறோம்.

வளர்ந்து வரும் நாகரீக உலகில், சாதி, இனி வாழப்போவதில்லை! நிறத்தையும் இடத்தையும் காட்டி, பேதமும் பிளவும் வளர்க்கும் எந்த அநாகரீகச் செயலும் கொடிகட்டிப் பறக்கமுடியாது!! அதைப்போல, ஆண்டாண்டு காலமாய் ஒரு மண்ணில் வளர்ந்து, அதனுடன் ஒன்றிவிட்டவர்களையும், ஹிட்லர் செய்தது போல் விரட்டியோட்டிவிடும் கட்டமும் ஏற்பட இயலாது. இந்நாட்டிலிருக்கும் பார்ப்பனர்கள் என்போரை, யாரும் எங்காவது

துரத்திவிட வேண்டுமெக் கருதினுல்—அது பகற் கனவேயாகும். இலங்கையிலும், பர்மாவிலும், மலேயாவிலும் போய்க் குடியேறிய தமிழர்களே விரட்டும் நிலைமையைக் கண்டிக்கும்போது, அவர்களைவிட இங்கு பல் வகையாலும் இடமும் ஏற்றமும் பெற்று விளங்கும் பார்ப்பன குலத்தவரை அடித்துவிரட்டுவதென்பது, ஆகாது; முடியாது. எனவே, வரப்போகும் நாட்களில் உயர்குடியென்போரும் தாழ்த்தப்பட்டோர் என்போரும் ஒரே நிலைக்கு வந்து மனித இனத்தின் குழந்தைகளாக வாழும் கட்டமே ஏற்படவேண்டும். இதை மறுப்பாரில்லை! தவறு, என உரைப்பாருமில்லை!! மனதில் ஏற்று, இம்மாபெரும் பணிக்குத் தங்களைத் தத்தம் செய்யும் 'ராமன்' போன்ற இளைஞர்கள் இருக்கிருர்கள், பார்ப்பன வகுப்பில். ஆனுல், தலைவர்கள், சரியாக இல்லை! இப்பாதையை நினைக்கவே, கூசுகிருர்கள்!! இந்தத் தலைவர்களைத்தான், திராவிட முன்னேற்றக் கழகம், "மாடியை விட்டு இறங்கி வாருங்கள். மக்கள் சேவையைப் பெரிதெனக் கருதுங்கள்," என்று அழைத்து வருகிறது. இப்போது இல்லாவிட்டாலும், என்ருவது ஒரு நாள் "எல்லோரும் ஓர் குலம்" என்று வாழும் நிலை கட்டாயம் மலரும் என்கிற நம்பிக்கை தி. மு. க.வுக்கு உண்டு. இந்த நம்பிக்கைக்கு உரம் தேடும் விதத்தில் நமது நடவடிக்கைகள் இருக்கவேண்டும்! அதே சமயத்தில், அந்தக் கூடாரத்திலிருக்கும் இளைஞர்களையும் நமது பக்கம் இழுக்கவேண்டும்!! — என்று, நாம் காரிய மாற்றி வருகிருேம். எண்ணற்ற பார்ப்பன குல இளைஞர்களும், இன்றைய தினம் தி. மு. க.வில் இருக்கிருர்கள். இதை, இழிவாக நாம் கருதவில்லை! திரு இடம், விடுதலை புரியான பிறகு, பார்ப்பன குலத்தினரும் நம்மோடு கலந்து வாழப் போகிறவர்கள் என்பதை நாம் மனதார நம்புகிருேம் — அந்தக் கட்டம் ஏற்படச் செய்வதுதான், தலையாய பணி எனவும் கருதுகிருேம். அதனுல்தான், சாதிபேதம் அற்ற ஒரு சமதர்மச் சமூகம் காண்பதே, தன்னுடைய இலட்சியமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கிறது.

இந்நிலையில், இன்று, ஏடுகளில் சில சேதிகளை அடிக்கடி காண்கிருேம், நாம். பெரியார் அவர்கள், சாதி ஒழிப்பின்மீதுள்ள பேரார்வத்தின் காரணமாகப் பேசிடும் சொற்களை எடுத்துக்காட்டி, மலர்ந்திடும் புது நிலையைக் குழப்பிடும் திருப்பணியில் பார்ப்பன குலத் தலைவர்கள் ஈடுபட முயன்று வருகிருர்கள். சர்க்காருக்கு 'மகஜர்' அனுப்பத் தெரிந்தவர்கள் அப்படி அனுப்பியும், 'ஏடுகள்' வைத்திருப்போர் தூபம்போட்டும், பல காரியங்கள் நடைபெறுகின்றன. சர்க்காரும், என்னதான் ஒடிப்பாடி கட்டியணைத்துக்கொண்டாலும், எதிர்க்கட்சித் தலைவராக விளங்கும் பெரியாரை, இதுதான் சமயம் என்று சிறைக் கூடத்தில் தள்ளி, மனதுக்குள்ளாகவே மகிழுகிறது! பார்ப்பன குலப் பெரியவர்கள் எழுப்பும் கூச்சலை மதித்து இந்தக் காரியம் செய்வதாகவும் காட்டிக்கொள்ளுகிறது!! ஒரே வீச்சில், இரண்டு காய்கிடைக்கிறது, என்று காங்கிரஸ் கருதுகிறது. நடவடிக்கையும் எடுக்கிறது.

ஆள்வோர் எடுக்கும் நடவடிக்கையும், பெரியார் அவர்களைப் பிடித்தடைக்கும் செயலும், அவர்களுக்கு லாபம் தரக்கூடும்; ஆனுல் நாட்டுக்கும் எதிர்காலத்துக்கும் நிச்சயம் நன்மைகள் ஏற்பட முடியாது. ஏனெனில், இன்று நமது தாயகத்துக்கு தேவையான நிலை, கசப்பை அகற்றுவதே ஒழிய—வளர்ப்பது அல்ல! கசப்பை வளர்ப்பதால், ஆட்சிக்கு, இலாபம் உண்டு; பார்ப்பனர்களைக் காட்டி பெரியாரையும், பெரியாரைக்காட்டி பார்ப்பன குலத்தினரையும், இருவரும் ஒருவரையொருவர் விரோதமாக எண்ணு வதையும், நடுவில்தான் சமரச்முகிழ்க்கும் ஆட்சியை நடத்துவதுபோலவும் காட்டிக் கொள்வதால், காங் கிரசுக்கு இலாபம் இருக்கிறது. ஏனெனில், இருவரும் மோதிக்கொள்ளும் வரையில், காங்கிரஸ் வாழும். டில்லி தர்பார், நீடிக்கும்!! — இதை, நன்ருகச் செய்ய முனைந்திருக்கிறது, காங்கிரஸ். வெற்றியும் கண்டு வருகிறது.

இந்தச் சதிக்கு, பார்ப்பனகுலத்தலைவர்கள் ஈடு படக்கூடாது—ஏதோ பெரிய ஆபத்து தங்களுக்கு வந்துவிட்டதாகக் காட்டி, உதவி தேடி ஓடி, தங் களது நிலையைப் பலியாக்கிக்கொள்ளக் கூடாது.

ஒரு பக்கம் 'மகஜர்'கள் அனுப்புகிருர்கள் அ சுக்கு! இன்னெரு பக்கம், பிராம்மண சங்கங்களை ஏற் படுத்த முயற்சிக்கிருர்கள்!!

கடந்த கிழமை திபாகயம்பதியிலே, சிறந்தவ என மதிக்கப்படும் M. S. சுப்ரமணிய (அய்யர்) தலைமை யிலே பலர் கூடி, "எங்கும் பிராமண மகாசபைக் கிளைகள் ஏற்படுத்துவதென்றும், யுவர் தொண்ட படை அமைப்பதென்றும்" தீவிரமாகப் பேசியிரு கிருர்கள். திருச்சி, மதுரை போன்ற இடங்களிலு இதுபோன்ற முயற்சிகள் நடப்பதாக அறிகிருேம்.

இது, நிலைமையை இன்னும் மோசமாக்குமே ஒழிய, சீர்திருந்த வழி செய்யாது. வகுப்புவாத வளரச் செய்யும், சாகச்செய்யாது.

ஆகவே, இன்று பார்ப்பனகுலத் தலைவ களுக்கு உள்ள முக்கியமான வேலை நாட்டின் சா ஒழிப்புக்குத் தங்களாலான ஒத்துழைப்பைத் த முன்வருவதுதான். அப்படி, முன்வந்தால், அச்ச அவர்களுக்குத் தேவையில்லை; மகஜர்கள அனுப் வேண்டிய அவசியமும் கிடையாது; புது மகாசபை கள் ஏற்படுத்தும் நெருக்கடியும் ஏற்படாது; தாய விடுதலைக்கு முட்டுக்கட்டை போடும் காங்கிரசின் காலடி விழும் கட்டமும் உண்டாகாது.

நல்ல வழிகாண முயல வேண்டும்! — பார்ப்பன குலத் தலைவர்கள். பார்ப்பனகுலத் தலைவர்கள் சாதிபேதமில்லாத சமூகம் அமைக்கவும், தாய்நா வாழும் நிலைபெறவும், சாத்யமானவைகளைச் செ வதே, அவ்வழியாகும், என்று நாம் வலியுறுத் வருகிருேம். இந்த வழியை உணர்வதாலேயே பல பார்ப்பன குல இளைஞர்கள், நமது பாதையில் சே வருகிருர்கள்! இதற்கு முட்டுக்கட்டை போடா சூழ்நிலையைப் பார்ப்பனகுலப் பெரியவர்கள் உண்டாக்கிக் கொடுப்பார்களேயானுல்; எதிர்கால வாழ்த்தும்.

# டில்லி-வெகுதூரம்!

**97,00,00,000** *ரூபாய்!*—ஏ, அப்பா, இதென்ன என்று மலைக்காதீர்கள்!! வடநாட்டிலே, ஆலை ஒன்று வாங்குவதற்காக, டில்லி ஒதுக்கியிருக்கும், தொகை இது.

**97 கோடி ரூபாய்!!** — சென்னை மாநில சர்க்காருடைய இரண்டு ஆண்டுக்கால வருமானம். ஒரே ஒரு ஆலைக்கு, ஒதுக்கப்பட்டிருக்கிறது, வடக்கே!!

**இதுவும் போதாதாம்!** — அந்த ஆலை அமைப்பதற்கு சிறு சிறு கருவிகள் வாங்குவதற்கு, இன்னும் பணம் தேவைப்படுமாம். தெரிவிக்கிறார், டில்லி அமைச்சர்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து, இந்த ஆலை அமைப்பதற்கான இயந்திரக்கருவி, வந்துகொண்டேயிருக்கிறதாம். இன்னும் இரண்டாண்டுகளில், இந்த ஆலை இயங்குமாம்—மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார், பார்லிமெண்டில்.

ஒரே ஒரு ஆலை! அதற்கு, 97 கோடி ரூபாய்!! — என்ன ஆலை தெரியுமா? எஃகு ஆலை! வட இந்தியாவிலுள்ள ரூர்கலா என்னுமிடத்தில் மிக வேகமாக உருவாகிக் கொண்டிருக்கும் இந்த ஆலைக்குத்தான், இவ்வளவு கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறது, டில்லி. டிசம்பர் 16ந் தேதி, பார்லிமெண்டில், மத்ய அரசின் சுரங்கத்துறை மந்திரி கே. டி. மாளவியா என்பார், விவரமாகத் தெரிவித்திருக்கிறார், இந்தச் செய்தியை.

வடக்காவது! தெற்காவது!!— என்று தெந்தினு பாடுவோர், "இருந்தாலென்ன! ரூர்கலாவும் எமது இந்தியாவில் இருப்பது தானே. இதைப் பெரிதாகச் சொல்லி, நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவுதேட முனைகிறுயோ," என்பர்.

வேதாரணியம் சர்தார் வேதரத்னம், தி. மு. க. அல்ல! பழுத்த காங்கிரஸ்வாதி!! காங்கிரஸ்காரர்களிலேகூடப் பலர் இந்தியை எதிர்க்கின்ற இச்சமயத்திலும், இந்தியின்மீது அசையாத பற்றுக் கொண்டவர்; அவ்வளவு தீவிரமான, 'அகில இந்தியா' வாதி. அவர், கேட்கிறார், மூன்றே மூன்று கோடி ரூபாய்! தொழில் ஒன்று துவங்கி நடத்துவதற்கு! மூன்றே மூன்று கோடி ரூபாய் இருந்தால் போதுமெனத் தெரிவிக்கிறார்!!

"மூன்று கோடி முதலைப் போட்டால், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு இலாபம் வரும்? இலட்சம் வருமா! பத்தாயிரம் வருமா!!" என்று கணக்குப்போட்டுப் பார்ப்பவர்கள் இருக்கக்கூடும். அவர்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறார், மூன்று கோடி ரூபாய் முதல் போட்டு அத்தொழிலைத் துவக்கினால் அடுத்த ஆண்டே மூன்று கோடிக்கு வருமானம் வரும் என்று!

மூன்றுக்கு மூன்று! — இவ்வளவு இலாபகரமான தொழிலை, யாரும் கண்டிருக்க முடியாது, என்ன முதல் போடுகிறோமோ, அந்த முதல் அடுத்த ஆண்டே கைக்கு வந்துவிடும். அது மட்டுமல்ல, இத்தொழிலை ஆரம்பிப்பதன் மூலம், ஏராளமான வேறு சில துணைத் தொழில்களும் வளர ஏதுவாகும்—அதன் மூலம் பலர் பிழைப்பு நடத்த இயலும் என்கிறார். தஞ்சைத் தரணிக்கு, புது வாழ்வு மலரும் என்கிறார். வேதரத்னம், விளையாட்டுப் பிள்ளையல்ல! நல்ல வியாபாரி! ஆகவே, சரியாகக் கணக்குப் போட்டுக் கூட்டியே, சர்க்காரைக் கேட்கிறார் 3-கோடி போட்டு அத்தொழிலைத் துவக்கும்படி.

"இந்திய சர்க்காரின் நிபுணர்கள்கூட வந்து ஆராய்ச்சி செய்தனர் என்று தன ஆசைக்கு ஆதாரமும் காட்டுகிறார். வேதாரணியம், உப்பளத்துக்குப் பேர் பெற்ற ஊர்! உப்பு விளையும் 150-மைல் பிரதேசத்திலே, நல்ல 'ஜிப்சம்' அகப்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனராம்—'ஜிப்சம்' வெட்டியெடுக்கும் தொழிலை அங்கு ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான் அவர் கோரிக்கை!

50, 60 கோடி தேவையில்லை; மூன்றே மூன்று கோடி—அதுவும் அடுத்த ஆண்டே, கைக்குவந்து விடும். ஆராய்ந்த இந்திய நிபுணர்கள் ஆராய்ச்சியை முடித்துச் சென்று, எவ்வளவோ நாட்கள் கி விட்டன—டில்லி, எம்முயற்சியும் செய்யவில்லை! எனவேதான் இதை, தஞ்சை மாவட்டக்கலெக்டர் கூட்டிய மாவட்ட முன்னேற்ற சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்தில் அறிவித்திருக்கிறார்!!

மூன்றுகோடி, கிடைக்க வழியில்லை நமக்கு! அதோ, 97-கோடியில் அமைகிறது ஒரு எஃகு ஆலை!!

சேலத்து இரும்பு—என்று பெருமைப்பட்டுக்கொள்ளுகிறோம்.

அங்கே ஒரு இரும்பாலை, அமைக்க வேண்டுமென, நாம்மட்டுமல்ல— காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சிகள் கூட வலியுறுத்தி வருகின்றன. விடிமோட்சம் காணோம்! ரூர்கலா, அங்கே, ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது — 97-கோடி ரூபாய், தண்ணீர்பட்டபாடாகிக்கொண்டிருக்கிறது!!

*

ஒரு உரத் தொழிற்சாலை—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப்படி, நெய்வேலியில், அமைக்கப்போவதாகக் கூறப்பட்டது. தேர்தலின் போது, செப்பினார்கள், காங்கிரஸ்காரர்கள் — நெய்வேலியில் நிலக்கரி வெட்டி எடுப்பது மட்டுமா? அங்கே ஒரு உர உற்பத்திச்சாலையையும் நிறுவப்போகிறோம் என்று!!

சிந்திரி சிறக்கிறது வடக்கே! — என்று நாம் கூறியதற்கு, பதில் தருவதுபோல, இந்தத் தகவலைத் தெரிவித்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இது இருப்பதாகத் தெரிவித்தார்கள். அமையப்போவதாக, அறிவுறுத்தினார்கள். டில்லி தொழில் மந்திரி சுவரண்சிங் என்பார் கடந்த கிழமை தெரிவிக்கிறார்—வெளிநாட்டு நாணயச் செலாவணி சரிவரக் கிடைக்காதுபோலத் தெரிவதால், நெய்வேலியில் அமைக்க உத்தேசித்த உர உற்பத்தி ஆலையையும் கைவிட நேரலாம், என்பதாக.

97-கோடி, ரூர்கலாவுக்குக் கிடைக்கிறது! ஒரு சாதாரண உர உற்பத்திச்சாலை அமைக்கப் பணமில்லையாம், சர்க்காரிடம்!!

**"நெய்வேலி உர உற்பத்தி ஆலைக்குத் தேவையான பணத்துக்கு வெளி நாட்டினரின் உதவிகோரப்பட்டதுண்டா? இல்லை!"**

ஆத்திரப்பட்டு, 'இந்து' ஏட்டில் ஒருவர், இவ்விதம் எழுதியிருக்கிறார். நெய்வேலியில் ஒரு உர உற்பத்தி ஆலை அமைக்க டில்லி எவ்வித முயற்சியிலும் ஈடுபடவில்லை! ஆனால், சங்கடமில்லாமல், சஞ்சலமில்லாமல் தெரிவிக்கிறது, 'கிடையாது' என்று!!

"உணவு உற்பத்தி பெருகவேண்டும் என்று பேசுகிறார்களே! அதற்கு உதவி செய்யும் இந்த ஆலை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், முக்கியமான

குறைந்த விலையில்! சிறந்த முறையில்!!

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

சி. என். ஏ.

தரும்

கருத்துப் படையல்கள்

வண்ண முகப்புடன்

எண்ணத் தொகுப்புகளுடன்

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும்

விலை 8-அணுதான்!!

தென்று தெரியாதா அவர்களுக்கு?" என்றும் கேட்கிறார், அவர்! டிச: 15-ந்தேதி, வந்திருக்கிறது 'இந்து'வில் இக்கடிதம்!!

**ஒரு சிலதான் நமக்கு ஒதுக்கப்பட்டது—அதிலும், ஒன்று போய்விடுவதென்றால், தென்னாட்டிலிருக்கும் நாம் வருத்தமும் ஏமாற்றமும் அடையாமலிருக்க முடியுமா?**—என்றும் கேட்கிறார், அவர்! எப்படி அடையாமலிருக்க முடியும்? நாமும் வரி செலுத்தாமலா இருக்கிறோம்--வளங்கொழிக்கும் நமது பூபாகத்தையும் சேர்த்துத்தானே, வெளி நாடுகளுக்கு "அடகு" வைத்துக் கடன் வாங்குகிறது, டில்லி? அப்படியிருக்கும் போது, வடக்கே வாழ்வு! தெற்கே தாழ்வா!!

**"தொழில் முன்னேற்றத்தில் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படவேண்டும். தென்னாட்டிலிருக்கும் வளங்களையும் வாய்ப்புகளையும் பார்க்கும்போது, ஏராளமான தொழில்களைச் சர்க்கார் இங்கே துவங்குவதற்கான சகல வசதிகளும் இருக்கின்றன."**

நாம் கூறுவதல்ல, இது! ஆந்திர வர்த்தக சபையின் தலைவரான வேணுகோபால் என்பவர், டில்லி அமைச்சர் நித்யானந்த கனுங்கோவுக்குத் தந்த வரவேற்பின் போது, கடந்த நவம்பர் 30-ந் தேதி இவ்வண்ணம் வெளியிட்டுள்ளார்!!

வளங்கள் உண்டு — என்று கூறுவது, ஆந்திர வர்த்தகசபையின் தலைவர்! இதோ காட்டுகிறேன், மூன்றுகோடி போட்டால் ஒரே ஆண்டில் அத்தொகை கிடைக்கும் என்கிறார், சர்தார் வேதரத்னம்!!

இந்த நிலைமையில் சென்னை சர்க்காரின் அதிகாரபூர்வமான வட்டாரத்திலிருந்து, என்ன தகவல் வருகிறது தெரியுமா? "பொறுங்கள் — எப்படியாகிலும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் பல தொழில்களை ஆரம்பித்தே தீருவோம். டில்லி முடியாது என்றாலும் விடுவோமா நாங்கள்?" என்கிற பதிலையே எதிர்பார்ப்போம், நாம். ஆனால் 'இந்து' 15-ந்

தேதிய இதழில் வந்துள்ளது இச் செய்தி.

இந்த ராஜ்யத்தில் தொழில் முன்னேற்ற சம்பந்தமாகப் போடப்பட்ட திட்டங்கள் யாவும் எதிர்பார்த்தபடி இல்லாமல் பின் தங்கிவிட்டதாக அதிகார பூர்வமான வட்டாரங்களில் கூறப்படுகிறது.

தி. மு. க. சொல்லவில்லை! அதிகாரபூர்வமான வட்டாரமே சொல்லுகிறது—இதனை!!

எதிர்பார்த்தபடி இல்லாமல் சென்னை பின் தங்கிவிட்டதாம்? வடக்குக்கு வாழ்வும், தெற்குக்கு ஓரவஞ்சனையும் காட்டும் போக்கில் டில்லி நடந்துகொண்டால் பின் தங்காமல், முன்னேறவா முடியும்? காரணம் அறிய விரும்புகிறோம், ஆள்வோரிடமிருந்து! அதிகாரவட்டாரமோ நம்மோடு சேர்ந்து கொண்டு, ஓலமிடுகிறது!

*

அஸ்ஸாம் — ஒரு எண்ணெய் ஆலைக்காக, எரிமலையான செய்தி பலருக்கு நினைவு இருக்கலாம். அஸ்ஸாமில் அமைக்கப்பட விருந்த அந்த ஆலையை, பீகாரில் நிறுவ, முடிவு செய்தது டில்லி. இதைக் கேள்விப்பட்டதும், அஸ்ஸாம் கொதித்து எழுந்தது! மாணவர்கள் — தொழிலாளர்கள் பிறமக்கள், அனைவரும் கிளர்ந்தெழுந்தனர். எதிர்க்கட்சிகள் யாவும், ஒருமுகமாயின. டில்லியை எதிர்ப்போம்! தனிநாடு அமைப்போம்! டில்லியின் உறவு நமக்கேன்?—என்கிற அளவுக்கு முழக்கம் கிளம்பிற்று. சென்னை மாநிலத்துக்கு கவர்னராக வரவிருக்கிறார் என்று கூறப்படுகிறதே இந்த விஷ்ணுராம்மெகதி தான் அங்கே முதலமைச்சர். அவர், டில்லிக்கு ஓடினார்—நேருவைச் சந்தித்தார் — பந்தைப் பார்த்தார்—நிலைமையைச் சொன்னார். டில்லி வழிக்கு வராது எனக் கண்டதும், "ஆலை அமைக்கப் போகிறீர்களா? இல்லை, இதோ, எமது மந்திரி சபையின் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளப் போகிறீர்களா?" என்று கேட்டார். சமரசம்—சன்மார்க்க உபதேசம் — ஐக்கிய ஆலாபனம்—நாமெல்லாம் ஒன்றன்றோ—எனும் ஒற்றுமைக் கீதம் எதுவும் பயனளிக்கவில்லை, அங்கே! சென்ற வாரம், டில்லி பார்லிமெண்ட்டில், அமைச்சர் அறிவித்திருக்கிறார், பீகாரைப் போல அஸ்ஸாமிலும் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்று!

இல்லாததை நிறுவுவார்கள்—இருப்பதையும் விரிவுபடுத்துவார்கள்—97 கோடி என்று கொட்டுவார்கள்—ஆனால், வளமிருக்கிற மண்ணை ஏமாற்றுவார்கள்; போட்ட திட்டத்தைக் கைவிடுவார்கள்; நிபுணர்கள் ஆராய்ச்சியை மூடுவார்கள் — இதுதான் நேரு சர்க்கார், என்றால் என்ன பொருள்! தெற்கும், வடக்கைப் போல வளம் பெறட்டும்—வாழட்டும் என்று டில்லி எண்ணுகிறது என்றா, கருதமுடியும்!!

இதனால்தான் தேர்தலின் போது நாம் தெளிவாகச் சொன்னோம், "இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு, தென்னாட்டிற்காக 6000 கோடி ரூபா தருவதாக டில்லி சொல்லட்டும். நாங்கள் தேர்தலில் நிற்கவில்லை," என்று.

நாம் அறிவோம், டில்லி ஒரு போதும், தென்னாட்டின் மீது அக்கரை செலுத்தாதென்பதை, வேண்டுமானால், சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிவதுபோல! தன்னால் இலாபம் அடையக் காத்திருப்பவர்களைக் கூட்டி வைத்து, இங்கு வரும்போது சண்டப்பிரசண்டம் செய்யலாம் பண்டித நேரு! இமய முதல்—குமரி வரை, ஒரே நாடன்றோ என்று உத்வேகத்துடன் பேசலாம்!!

ஆனால், செயல்......? அன்பர் வேதரத்னம் தெரிவிக்கும் ஆசை, ஆந்திர வர்த்தக சங்கத் தலைவர் கூறும் அதிருப்தி, நெய்வேலி உர ஆலைக்கு வழங்கும் அநீதி, ஆகியவைகளைப் பார்த்தாலே, புரிந்துகொள்ளலாம் — டில்லி, நம்மைவிட வெகுதூரத்திலிருக்கிறது, என்கிற உண்மையை!!

★

# நூல் அரங்கு

**குறள் கொடுத்த குரல்:** ஆசிரியர் டி. கே. சீனிவாசன்: சாந்தி நூலகம் 2/122 பிராட்வே சென்னை 1. பக்கங்கள் 84. விலை ரூ. 1.

டி. கே. சீனிவாசனின் எழுத்தைத் தமிழர் நன்கு அறிவர். கருத்துக்கள் பொதிந்த எழுத்துக்கள் அவர் படைப்பு. புதிய சமுதாயம் காண வேண்டும் என்ற துடிப்புடையோர்க்கு சீனிவாசனின் எழுத்துக்கள் வழி காட்டுவன.

'குறள் கொடுத்த குரல்' என்பது இந்த நூலில் உள்ள ஆறு கதைகளில் ஒன்றின் தலைப்பாகும். இந்நூலில் உள்ள ஆறு கதைகளும் நல்ல கருத்துக்களை உயிர் நாடியாகக் கொண்டு பின்னப்பட்டிருக்கின்றன. எழுதுவது 'சும்மா' பொழுதுபோக்குக்குப் பயன்பட என்ற கருத்து இன்று மாறிவிட்டது. எழுதுவது ஏதேனும் உணர்த்துவதற்கு என்பதனை பலர் உணருகின்றனர். அந்த உண்மையை உணர்ந்தவர்கள் இந்தத் தொகுப்பில் உள்ள கதைகள் உடலுக்கு உள்ளே ஓடும் இரத்த கானங்களைப்போல் கதைகளுக்கு உள்ளே, கதை நிகழ்ச்சிகளுக்கு உள்ளே ஆசிரியர் ஓடவிட்டிருக்கும் கருத்துகளைக் கண்டு பாராட்டுவர்.

பிள்ளைக் கறி சமைத்த சைவர்க்கு புதுவிளக்கம் தருகின்றது 'வெற்றி யாருக்கு?' தமிழகம் தளைகளுக்கு உட்பட்டதை எடுத்துச் சொல்லி தளை நீக்கும் வழி காட்டுகின்றது. 'நினைவும் நிகழ்ச்சியும்!' பிறவும் இவைபோல் சுவை நிரம்பியனவே.

* * *

**வரலாற்றில் தமிழகம்:** ஆசிரியர் கா. ப. சாமி. கிடைக்குமிடம்: குறள் மன்றம், 38, கேம்பல் ரோடு, கோலாலம்பூர். பக்கங்கள் 64. விலை ரூ. 1.

கடல் கடந்த நிலப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் தங்கள் தாயகத்தை மறவாமல் நினைவில் வைத்துப் போற்றுவதனை, அடிக்கடி காணுகின்றோம். இந்த நூல் கடல் கடந்து வாழும் ஒரு தமிழ் மகனின் படைப்பாகும்.

தமிழகம் தொன்மையானது புகழ் மிக்கது என்பதனை எடுத்துச் சொல்லுகின்றோம். அதனை நிறுவும் வகையில் ஆசிரியர் பல கோணங்களில் நின்று தமிழகத்தின் பழமையை நிலைகாட்டி, வரலாற்றில் அது இடம் பெற்றுள்ளமையை இலக்கியச் சான்றுகளுடன் தமது நூலை அமைத்திருக்கின்றார்.

"திரு. சாமி தம் ஆராய்ச்சி முடிவுகளுக்கு ஆதாரமாக எண்ணற்ற மேற்கோள்களைக் காட்டியிருக்கிறார். அம்மேற்கோள்கள் ஆணித்திறமானவை; தமிழர் வரலாற்றுக்கு அடிப்படையானவை." என இந்நூலுக்கு 'அறிமுக உரை' எழுதியுள்ள முருகு சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார்.

நல்ல ஆராய்ச்சித் தொண்டு. ஆசிரியர் பாராட்டுக்கு உரியவர். ★

# அதைப் பாரீர்!

நான்கு தீவுகளைக் கொண்டது அந்த நாடு! இந்திய உபகண்டத்தைவிட எட்டு மடங்கு சிறியது! இங்கிருக்கும் மக்களைப் போல் கால் பகுதி பேரே வசிக்கின்றனர்! இதுதான், ஜப்பான்.

கடலுக்குள் சிக்கிய தோணி போல இருப்பதால், உணவு தானியங்கள் அதிகமாகக் கிடைக்கும் வாய்ப்பில்லை ஜப்பானுக்கு. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தே, மக்களைக் காப்பாற்றியாக வேண்டும். இப்படிப்பட்ட ஜப்பானிடமிருந்துதான், நமது சர்க்கார், பயிர்த் தொழில் சாகுபடியைக் கற்றுக்கொள்கிறது! ஜப்பானிய சாகுபடி முறையென்று, இங்கெல்லாம் பரப்பப்படுகிறது!!

எரிமலையும், கடலும் அதிகமிருப்பதால், நிலமடந்தையின் 'கருணை' அதிகம் கிடையாது, ஜப்பானுக்கு. ஆகவே, கடல் மூலம் கிடைக்கும் உணவைப் பெறுவதில் மிகமிக ஊக்கம் காட்டுகின்றனர், அங்கு. மீன் பிடிப்பது, திமிங்கிலவேட்டை, போன்றவைகளை மிகமிக அதிகமான அளவில், ஊக்குவித்து வருகிறார்கள். உணவுப் பஞ்சம் குறித்து 'ஒப்பாரி' நடைபெறும் இங்கோ, உலக மரக்கறியாளர் மாநாடு நடத்தப்படுகிறது! பெருமையாகப் பேசுகின்றனர், ஆளும் அமைச்சர்கள்!! இந்த வகையில் 'ஜப்பானை'ப் பின்பற்றவில்லை.

அணுகுண்டு வீசப்பட்ட இடம் ஜப்பான்—போர்ப் புயலின் கோர விளைவுகளை அனுபவித்த பூமி, அது. ஆனாலும், இன்று, எஃகு தயாரித்தல், சிமெண்டு உற்பத்தி, ரேயான் தொழில், நெசவுத்துறை போன்ற எல்லாவற்றிலும் சிறந்து விளங்குகிறது.

நேரு அவர்கள் அண்மையில் அங்கு 'விஜயம்' செய்திருந்தார். விஜயம், 'பிச்சை கேட்க' அல்ல! பெருமை பெறவும், அதே சமயத்தில், ஏதாவது கிடைத்தால், அதையும் பெற்றுக்கொண்டு வரவும்தான்! சிறு நாடு ஜப்பானும், சில உதவிகளைச் செய்வதாக, அகண்ட பாரதத் தலைவருக்கு உறுதிமொழி அளித்திருக்கிறது.

எப்படி ஜப்பான் இவ்வளவு முன்னேற்றமடைந்தது தெரியுமா —எல்லாம் அமெரிக்கா அளித்த உதவியினால்தான், என்று சொல்லக்கூடும். ஆனால் இந்த நாடு, போரின் காரணமாக என்னென்ன அலங்கோலத்துக்கு ஆளாயிற்று என்பதை நாம்மறந்துவிடக்கூடாது. நாச நர்த்தனம் நடைபெற்றும், புத்தெழுச்சி பெற்றிருக்கிறது, ஜப்பான்! அதிலும் புகழத்தக்க அளவுக்கு வளர்ச்சி கண்டிருக்கிறது!! இருந்தும், ஜப்பானியப் பிரதமரின் முகத்தில், ஆனந்தம் கூத்தாடவில்லை — சிந்தனை மயமாகவே படங்களில் காட்சியளிக்கிறார். சிரிப்பும் குதுகலமும், 'பிச்சை கேட்கும்' நமது உபகண்டத்துப் பிரதமரிடம்தான் காண முடிகிறது—அடிக்கடி!!

எல்லா வகைகளிலும் இங்கு பஞ்சப்பாட்டையே கேட்கிறோம்—கடந்த போரின்போது பாதிக்கப்படாத நாடு இது — சுயராஜ்யம் பெற்ற சுந்தர பூமி. எனினும் எத்துறையிலும், இன்னும் அதிருப்தியும் சங்கடமும்தான் நிலவுகிறது. தொழில் துறைகளிலோ சிறுநாடு ஜப்பான் அளவுக்குக் கூட, முன்னேற முடியவில்லை. போருக்குப்பின் ஜப்பான் பெற்றிருக்கும் வளர்ச்சியையும், இந்திய உபகண்டத்து வளர்ச்சியையும் ஒப்பிட்டால், மலையும் மடுவும் போலத் தோன்றும்.

எனினும் ஜப்பானியப் பிரதமர், ஆனந்தத்தோடு இல்லை—அவரை, மனிதகுல மாணிக்கம் என்று அழைப்பாரில்லை — சமாதானத் தூதன் என்று சொல்வாரில்லை—மக்கள் துயர்தீர்க்க வந்த மகானுபாவர் என்று உரைப்பாருமில்லை. இதெல்லாம், நேரு பண்டிதரைப்பற்றித்தான் கூறப்படுகிறது. வியன்னா—புடாபெஸ்ட்—மாஸ்கோ—மிலான்—நியுயார்க்—இலண்டன் — பெர்லின்—பாக்தாத் — கெய்ரோ — டமாஸ்கஸ். இப்படி எங்கு பார்த்தாலும் நேரு பண்டிதருக்குத்தான் வரவேற்பும் வைபவமும் நடத்தப்படுகிறது—மாபெரும் விருந்து நடத்துகிறார்கள்—பட்டங்கள் சூட்டுகிறார்கள். போருக்குப் பின், தன்னாட்டைப் பொன்னாடாக்கி இருக்கும் ஜப்பானியத் தலைவருக்கல்ல—'பட்டாளம் பட்டாளமாக' ஒருவர் பின் ஒருவராக வெளிநாடுகளுக்கு 'திருவோடு' தூக்கிச் செல்லும் இந்தியப் பிரதமருக்கே, கிடைக்கிறது!!

ஜப்பானை ஆள்வோர், வேறு நாடுகளில் ஆட்சிசெலுத்துவோர் ஆகியொருக்கு வரவேபுகள் கிடைக்காததற்கும், அவர்கள் அடிக்கடி 'அகில உலக விஜயம்' செய்யாமலிருப்பதற்கும் என்ன காரணம்? வேறு எதுவுமில்லை. அவர்களுக்கு, தன்னாடும், அங்கு வாழும் மக்களைப் பசி பட்டினி இல்லாமல் வைப்பதும் பெரிதாகப்படுகிறது. வெளிநாடுகளிலே உள்ள பத்திரிகைகளில் வரும், படங்களையும் பாராட்டு விழாக்களைப்பற்றிய செய்திகளையும் விட 'பசித்த முகங்களே' பெரிதெனத் தெரிகின்றன!! இதனால்தான், அவர்களெல்லாம், ஆட்சிக் கூடத்திலே அமர்ந்தபடி, திட்டங்கள் தீட்டுகிறார்கள்—தீட்டிய திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படுகிறதா என்றும் பார்க்கிறார்கள். வீண் விஜயங்களுக்கு நேரத்தை விரயமாக்காமலிருப்பதால், சொந்த நாட்டின் பிரச்னைகளையும் தேவைகளையும் சரிவரக் கண்காணிக்கும் நேரமும் நினைப்பும் கிடைக்கிறது, அவர்களுக்கு.

நேருபண்டிதர், திட்டங்கள் தீட்டுகிறார்—ஆனால், அதுபற்றி நினைப்பும் கவனமும் கொள்ள நேரம் கிடைப்பதில்லை அவருக்கு —அடிக்கடி, வெளிநாடுகளுக்குப் பறக்கிறார்! பறந்து திரும்பும் போதெல்லாம் புதிய புதிய சேதிகளை—கண்ட காட்சிகளை—வித விதமாகவும் வர்ணிக்கிறார்!! ஜப்பானைப் பாரீர் — என்று, அறைகூவல் விடுக்கிறார், நாட்டவருக்கு.

"நாங்கள் பார்க்கிறோம் ஐயா! அதே சமயத்தில், அங்கே ஆட்சி புரிகிறவர்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதையும் தயவுசெய்து நீங்கள் பாருங்கள். போதனை, அதிகம் புரிவதில்லை. உட்கார்ந்தபடியே, சாதனையைக் காட்டுகிறார்கள். போர்ப்புயலில் சிக்கிச் சீரழிந்தும்கூட, ஜப்பானிய மக்கள் பெற்றுள்ள ஏற்றத்துக்கு யார் காரணம்? என்று, நாட்டு மக்கள் அவரைப்பார்த்துக் கேள்வி விடுக்கிறார்கள்—வழியும் கண்ணீர் மூலமும், உதிரும் பெருமூச்சைக் காட்டியும்.

இங்கு வாழும் யாரையாவது பார்த்து "ஜப்பானியப் பிரதமர், யார்?" என்று கேளுங்கள். பதில் வருமுன், ஜப்பானியருக்கும் பிரதமர் மாறி புதியவர் ஒருவர் வந்து விட்டாலும் வரக்கூடும்! அவ்வளவு சீக்கிரம், மாறுதல் ஏற்படினும் ஆச்சரியமின்று!! ஆனால், இங்கு, ஆண்டு பத்தாக ஒருவரே, பிரதமர். அவருடைய பெயர், டோக்யோவுக்குத் தெரியும்—ஜப்பானிலிருப்பவர்களுக்கு இந்தியப் பிரதமர் யார் என்பது நன்றாகத் தெரியும். அந்தளவுக்கு, இந்தியப் பிரதமருக்கு கீர்த்தியிருக்கிறது.

கீர்த்தியைக் காட்டி இங்குள்ளோர் கித்தாப்புக் கொள்ளலாம்- "பார்த்தீரோ, எமது பண்டித நேருவின் புகழை," என்று பரவசமடையலாம்-பயன், என்ன? பரிதாபம் தேம்பும்பாட்டாளிகளையும், பதைத்துச்சாகும் விவசாயிகளையும், பல திட்டங்கள் தீட்டியும் 'பஞ்சம்! பஞ்சம்!' என்று விழும் குரல்களையுமே, கேட்க முடிகிறது, காணமுடிகிறது நாம்.

ஜப்பனில் வாழும் எந்தப்பெரிய தலைவருக்கும், நமது நேருவைப் போல், மக்களைக் கவரும் சக்தி கிடையாது. மாவீரன் என, மேடைமீதேறி, மள மளவென்று, நூற்று இருபது நிமிடங்கள் கர்ச்சிக்கும், திறமையும் இருக்க முடியாது. குழந்தைச் சந்திரன் முதல், குடும்பக் கட்டுப்பாடு வரை-யில் பேசும் ஆற்றல் பெற்றவர்களையும் காண இயலாது. அங்கேயிருப்பவர்கள், இவைகளையெல்லாம்விட, ஒவ்வொரு வீட்டையும் அதன் மூலம் நாட்டையும் உன்னதபுரியாக்கும் 'சாதாரண வேலை'யில் ஈடுபட்டிருக்கிறார்கள். இங்கோ, சண்டமாருதம் கேட்கிறோம்! சங்கடங்களையும், அனுபவிக்கிறோம்!!

**ஒவ்வொரு வீடும், ஒரு தொழிற்சாலை! வீட்டின் ஒவ்வொரு அறையும் ஒரு தொழிற் கூடம்!** —என்று ஜப்பானைப்பற்றி வர்ணிக்கிறார்கள். இப்படித்தொழிலில் ஈடுபடுவோருக்கு ஜப்பானிய சர்க்கார் தங்களாலியன்ற சாத்யமான உதவிகளையெல்லாம், அளிப்பதாகவும் தெரிய வருகிறது. வானொலியில் அடிக்கடி பேசுவதன் மூலம் அல்ல; அடிக்கடி நிருபர்கள் கூட்டங்கள் நடத்தியல்ல; அதற்குப் பதில், மக்களின் தேவை இன்னதென்று கண்டறிந்து அவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குகிறார்கள்.

மண்ணும், பொன்னாகிறது அங்கு! இங்கோ, பொன்னும் மண்ணாகிக்கொண்டிருக்கிறது!!

*

ஆறு ஆண்டுக் காலம் ஜப்பானுக்குப் போய் அங்கு நடைபெறும் குடிசைத் தொழில்களைப் பற்றிக் கண்டறிந்து வந்திருக்கும் நிபுணர் **பிக்குசமன்லால்** என்பவர் தெரிவிக்கிறார்—வெறுத்தொதுக்கும் உமியும் அங்கு பயன்படுகிறது! வீசியெறியும் கந்தையும் அங்கு காசுதரும் ஆடையாக்கப் படுகிறது என்று!

இந்தஉண்மையை உற்சாகமாக உரைத்த நிபுணர், இங்குள்ள சர்க்கார் எப்படி நடக்கிறது என்பதை உரைக்கவில்லை. சர்க்காரின் மீதுள்ள பாசம்போலும்! அதனால் மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறார், அந்த உதாரணத்தைப் பின்பற்றச் சொல்லி. மக்களிலும், அவர் வாலிப உலகத்தைப் பார்த்து அழைக்கிறார்—இளைஞர்களே! ஏனப்படி, குமாஸ்தா வேலைகளைத்தேடி— ஓடுகிறீர்கள்? அதற்குப்பதில் குடிசைத் தொழில்களை ஆரம்பியுங்கள் என்பதாக!!

இங்குள்ள வாலிபர்கள், வேலை செய்யமறுக்கவில்லை. வேலைக்கு அலைகிறார்கள். ஏதாவது ஒரு தொழிலைச் செய்து, ஏற்றம் காணத்தான் துடிக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் வசதியென்ன? வாய்ப்புண்டா, இளைஞர்கள் ஏதாவது ஒரு தொழில் செய்ய? சர்க்காராவது, அப்படியொரு திட்டம்வைத்திருக்கிறதா கையில்? சிறுசிறு குடிசைத் தொழில்களைத் துவங்குவோருக்கு உதவியும் ஒத்தாசையுமாவது அளிக்குமா அரசாங்கம்? இல்லை! கிடையாது! இதுபற்றி ஏதாவது கேட்டால், மௌனமே பதிலாகத் தரப்படுகிறது!! உதவி கேட்பவர்களைப்பார்த்து 'உபதேச மழை' பொழியப்படுகிறது!!

**"நான் கடினமாக உழைக்கிறேன்,"** என்று கூறுகிறார், பண்டிதநேரு. உண்மைதான்; உழைக்கிறார். ஆனால், அந்த உழைப்பின் பலன் என்ன? வாய் வீச்சும், போதனைப் பேச்சுமாக முடிகிறதே அன்றி, பயனுள்ளதாக அமையவில்லை!!

ஜப்பானைப் பாரீர்! அதைப் பார்த்துத்தெரிந்துகொள்வீர்!!— என்று, மக்களுக்குத் தெரிவிக்கிறார்கள் மந்திரிகள். நம்மிடமிருந்து கழிவு இரும்புகளைக் கொண்டு சென்று, இயந்திரங்களைத் தயாரித்து அனுப்பும் ஜப்பானைப் பார்க்க வேண்டியதுதான் ஒவ்வொருவரும். அதே சமயத்தில், அந்த ஜபபான் வழங்கும் சில படிபபினைகளையும் நமது அமைச்சர்கள் அறிந்து கொள்ள வேண்டும்? செய்வார்களா, நேருவின் சகாக்கள்! நமக்கு நம்பிக்கையில்லை — போதனை புரியத்தான் இவர்களிருக்கிறார்களே ஒழிய, சாதனைகளை அறிய அல்ல!!

*

## திருமணம்

சோளிங்கபுரம் தோழர் எஸ். சஞ்சீவி அவர்கள் மகன் தோழர் ச. இராதாவுக்கும் ரெட்டிவலம் தோழர் முனுசாமி அவர்கள் மகள் **பேபிக்கும்** 11—12—57 புதன் கிழமை காலை 10-மணிக்கு சோளிங்கபுரத்தில் சென்னை சட்டமன்ற துணைத் தலைவர் **பக்தவத்சலம்** அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது.

திராவிடநாடு வளர்ச்சிக்கு ரூ. 5, அன்பளிப்பு தரப்பட்டது.

*

சோளிங்கபுரம் கூட்டத்தில் சோளிங்கபுரம் தோழர் நரசிம்மன் அவர்கள் மகனுக்கு **செங்குட்டுவன்** என சி. என். எ. பெயர் சூட்டினார்.

அதன் நினைவாக திராவிடநாடு வளர்ச்சிக்கு ரூ- 2, அன்பளிப்பு தரப்பட்டது.

# சிறு துளி! பெருவெள்ளம்!!

இந்த உபகண்டத்தின் ஒப்பற்ற தலைவர்தான்: நேரு பண்டிதர். மறுக்கவில்லை, நாம். அவர் எங்காவது 'விஜயம்' செய்தால் அசம்பாவிதம் ஏதும் நடந்துவிடாமலிருப்பதற்காகத் தக்க பாதுகாப்புகள் தரப்படுகின்றன. அவசியம் என்போம், இதனையும்.

வருகிறார் அவர்!—என்றதும்' பாதைகளைச் செப்பனிடுகிறார்கள்' மேடு பள்ளங்களை சமம் செய்கிறார்கள், வாழ்த்து வளையங்களைக் கட்டுகிறார்கள், சிறுவர்களை இழுத்துச் செல்கிறார்கள், சிறப்பாக அணிவகுப்பு மரியாதை அனைத்தும் நடாத்துகிறார்கள். கூடாது என்றும் கூறவில்லை, நாம். நாட்டையே ஆளும் முதல்வராக, காங்கிரஸ் கோட்டையின் காவலராக இருப்பவர் அவர் — ஆகவே, அவருக்குச் சீரும் சிறப்பும் வழங்க அவரது ஆட்சியினர், கட்சியினர், துடிப்பது இயல்பு.

சர்க்கார் மந்திரிகள் சிக்கனத்தின் சின்னங்களாக விளங்கவேண்டும், என்று தெரிவித்தவர் நேரு. மின்சார விளக்குகளை அதிகம் எரிக்காதீர்! காருக்குக் கொடி போடாதீர்! சிறு விஷயங்களில் கூடப் பணத்தைச் சேமியுங்கள்!-- என்று எல்லோருக்கும் கடிதம் எழுதினார் முன்பு. பல துளி பெரு வெள்ளம்; சில்லரை சில்லரையாக அழியும் பணத்தை மிச்சப்படுத்தினாலே ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பல கோடி ரூபாய் கிடைக்கக்கூடுமெனக் கூறப்பட்டது.

உண்மைதான்! சில்லரை இனங்களில் கூடக் கருத்தைச் செலுத்த ஆரம்பித்தால், பெரிய விஷயங்களில் கூடக் கவனம் சென்று, விரயமாகும் பணம் மிச்சப்படும் வாய்ப்பு ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று கருதினோம்.

அண்மையில் நேரு பண்டிதர், இங்கு வந்து சென்றார்! திண்டுக்கல்லுக்கு அவர் இரயில் மூலம் செல்ல நேரிட்டது!! இரயில் ஏற வேண்டுமானால், எழும்பூர் நிலையம் இருக்கிறது—கிண்டி கவர்னர் மாளிகையிலிருந்து எழும்பூருக்கு வந்து இரயிலேறுவது காலதாமதம் ஆகுமெனின், கிண்டியிலேயே இரயிலை நிறுத்தச் சொல்லி, அப்படியே ஏறிச்செல்லலாம். கூடாது என்று யாரும் சொல்லவில்லை! எல்லாப் புகைவண்டி நிலையங்களையும்போல கிண்டியிலும் வசதியாக இரயிலேறுவதற்கு, மேல்பாலமும் பிளாட்பாரமும் இல்லாமலில்லை!! ஆனால், இரயில்வே நிர்வாகத்தினர், என்ன செய்தார்கள் தெரியுமா?—

ஐயா,

**கிண்டி இரயிலடிக்குக் கீழ்ப்புறமுள்ள காம்பவுண்டுச் சுவரை இந்தத் தடவையும் இடித்து, பிரதமர் நேரு மதுரைக்கு இரயில் ஏறுவதற்காக, தற்காலீக பிளாட்பாரம் ஒன்று போட்டார்கள். இப்படி அடிக்கடி நடக்கும் செலவுகளைக் கண்டு, பாமர மனிதர்களின் உள்ளம் பதைக்காமலிருக்காது. இந்தப் பிளாட்பாரம் போடுவதற்கு ஆன செலவு, மிகக் கொஞ்சம்தான் என்று கூறக்கூடும். ஆனால், சின்னஞ்சிறு துளிகள் சேர்ந்துதான் பெருவெள்ளமாகின்றது. பிரதமர், கொஞ்சம் முன்னதாகவே, ராஜபவனத்திலிருந்து புறப்பட்டு நேராக எழும்பூர் இரயிலடிக்குச் சென்று இரயில் ஏறக்கூடாதா? அது இயலவில்லையென்றால், நிரந்தரமாகவே கிண்டி, மீனம்பாக்கம் இரயிலடிக்குக் கீழ்ப்புறம் ஒரு பிளாட்பாரத்தை அமைத்து ராஜதந்திரிகள் இறங்கவும் ஏறவும் வழியமைக்கக் கூடாதா?**

**குரோம்பெட். சேஷாத்ரி ஆசார்யா.**

'இந்து'வில், இவர் கடிதம் எழுதி, கவலையைத் தெரிவிக்கிறார்! புதிதாகப் பிளாட்பாரம் போடுவதற்காகக் காம்பவுண்டு சுவரை இடிக்கிறார்கள் — பிறகு போடுகிறார்கள். இது வீண் செலவுதானே! இதைச் செய்வது, டில்லியின் இரயில்வே இலாகா!!

ஐந்து நிமிட வேலைக்காக, ஒரு சில ஆயிரம் ரூபாய்கள் நஷ்டமாகலாமா? இது போன்ற சில்லரை இனங்களிலும் சேமிப்பு வேண்டுமென்று கூறப்படுகிறதே! இதுதானா, சேமிக்கிற வழி!! யார் வீட்டுப் பணம் இது? ஏழையும், இல்லாதவனும் திண்டாடுகிறான்-தெருவில் நிற்கிறான் — ஆனால், ஒரு சில நிமிடத்துக்காக, வீணாக இடித்துக் கட்டுவதா!

உண்மையில், இதுபோன்ற வீணாடம்பரங்கள், நிறுத்தப்படவேண்டுமென்று பேசப்படுகிறதே ஒழிய—அதுபோல நடவடிக்கைகள் இருக்கின்றனவா என்று பார்த்தால், ஏமாற்றமே பதிலாகக் கிடைக்கிறது.

* * *

சில கிழமைகளுக்கு முன்பு மராட்டிய மாவீரன் சிவாஜிக்கு, திப்ருகார் எனுமிடத்திலே மாபெரும் வெண்கலச் சிலை

## பொங்கல் மலர்

### சந்தாதாரர்களுக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ஐம்பது (0—8—0) காசு. எனவே சந்தாதாரர்கள் மலருக்கெனத் தனியாகப் பணம் எதுவும் அனுப்ப வேண்டியதில்லை.

மலரைப் பதிவுத் தபால் மூலம் பெற விரும்புவோர் மட்டும் ஐம்பது காசு (0—8—0) அனுப்பினால் போதும்.

**பொறுப்பாளர்.**


யொன்றை நிறுவினார்கள்! மிகப் பெரிய சிலை — அதனைத் திறந்து வைக்க நேருபண்டிதரையும் டில்லியிலிருந்து தருவித்திருந்தார்கள்!! மாவீரனின் சிலையை, இன்றைய மாவீரராகக் கருதப்படும் நேருவைக் கொண்டு திறந்துவைக்க வேண்டுமென, விழாக் கமிட்டியார் கருதியதுபொருத்தமானதுதான். ஆனால், அச்சிலை திறப்பதன் மூலம், மராட்டிய மண்டலத்தில் நேருமீது ஏற்பட்டிருக்கும் ஆத்திரம் அடங்கக்கூடும் என்று பம்பாய் அரசு எண்ணி, கோலாகலமாகக் கொண்டாடியது இவ்விழாவை. விழாவுக்குப் பூரிப்போடு சென்றார்! கருங்கொடிகளும் ஆயிரக் கணக்கில் வரவேற்றனவாம், நேருவை!! அந்த விழாவுக்காக திப்ருகார் கோட்டைக்குச் செல்லப் பூனாவிலிருந்து புதிதாக ரோடு ஒன்று அமைத்தார்களாம். ஏற்கனவே ரோடு இல்லையே என்றெண்ணுகிறீர்கள்! ரோடு, உண்டு; ஆனால் பிரதம மந்திரி வருகிறாரே, அதற்காகப் பிரத்தியேகமான அழகுடன், 'தார்'ரோடு ஒன்று அமைத்தார்கள். என்ன செலவு தெரியுமா, அந்தப் பாதைக்கு! சுமார் 2½-இலட்சத்துக்கு மேல் என்கிறது செய்தி!!

பம்பாயிலிருந்து வெளிவரும் 'கரண்ட்' ஏடு, செய்தியையும் தந்து, ஆள் நடமாட்டமோ அல்லது அதிகப் போக்குவரத்தோ இல்லாத அந்தப் பாதைக்கு, 'ஒரு நாள் கூத்து'க்காக இவ்வளவு ரூபாய் ஏன் செலவழிக்க வேண்டும் எனும் கருத்தில், செய்தியையும் தந்திருக்கிறது. 2½-லட்சரூபாய்! ஒருநாள் கூத்துக்கு!!

* * *

ஒரு சமயற்காரர்! அவருக்கு எவ்வளவு சம்பளம் தெரியுமா? என்ன, 20-இருக்கும், அதிகமாகப் போனால் 50-இருக்கும் என்று நினைப்பீர்கள். அல்ல, நண்பர்களே அல்ல; ஒருசமயற்காரருக்கு இந்த சர்க்கார் 1845-ரூபாய் சம்பளம் தருகிறது! ஆண்டுச் சம்பளமோ என்றெண்ணுகிறீர்கள், ஒரு மாதச் சம்பளமேதான், 1845-ரூபாய்!!

கிட்டத்தட்ட ஒரு அமைச்சர் வாங்குகிற சம்பளமாக இருக்கிறதே—யார் இந்தப் பாக்கியசாலி, எங்கே இவருக்கு வேலை, எந்த ஊர், என்றெல்லாம் கேட்பீர்கள். சமயற்காரர், டில்லியிலே இருக்கிறார்! டில்லியில், சர்க்கார் கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டிக்கட்டியிருக்கும் அசோகா ஓட்டலிலே, வேலையிலிருக்கிறார். அவருக்குத்தான் இந்தச் சம்பளம்!!

இந்தச் சமயற்காரர், இந்திய உபகண்டத்தைச் சேர்ந்தவரல்ல; சுவிட்சர்லாந்திலிருந்து வரவழைக்கப்பட்டவர்!! இவ்வளவு பெரிய அகண்ட பாரதத்திலா ஒரு சமயற்காரர் கிடைக்காமற்போய்விட்டார்? சமயலிலே கைதேர்ந்தவர்கள் கேரளத்தில் இல்லையா, வங்கத்தில் கிடையாதா, பஞ்சாப்பில் அகப்படமாட்டார்களா, பம்பாயில் இருக்கமாட்டார்களோ, என்று கேட்காதீர்கள்! இது சுயராஜ்ய சர்க்காரல்லவா, அதனால் 'சுதேசி'களை எப்படிப் பிடிக்கும்? சுவிட்சர்லாந்துக்கு எழுதி அங்கிருந்து வரவழைத்து 1845-ரூபாய் சம்பளம் தருகிறார்கள்!! அந்தச் சமயற்காரர் ரூ 1845 பெறக்கூடிய அளவுக்குத் திறமைசாலியாகக் கூட இருக்கலாம்; அதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அந்தளவு தர, பணத்துக்குத் திண்டாடும் நம்மால் இயலுமா என்கிற பிரச்னை ஒன்று இருக்கிறதே!! அதிலும், தினசரி, பணமில்லை எனும் பல்லவியும்; அமெரிக்காவுக்குப்போய் பிச்சையெடுக்கலாமா ஜெர்மனியைப்போய்க் கெஞ்சலாமா என்கிற கட்டமும் இருக்கிறதே—இந்த நிலைமையில், இப்படியெல்லாம் சிறுசிறு வழிகளில் பணத்தைக் கொட்டினால் என்ன பொருள்? இப்படிக் கொட்டுவதும் யார் வீட்டுப் பணம்? ஏழைகள் சிந்தும் வரிப்பணமன்றோ!!

*

சிறு சிறு துளிகள், இப்படி ஏராளம் விரயமாவதுமட்டுமல்ல, 'பெருவெள்ளமும்' போய்க்கொண்டிருக்கிறது, சர்க்காரின் கஜானாவிலிருந்து! சில்லரை இனங்களில்தான் இப்படியெல்லாம் ஊழல்கள் போலும் — பெரிய இனங்களில் நமது நேரு சர்க்கார் விட்டுவிடாது —பணத்துக்காக என்ன பாடுபடுகிறது—எங்கெல்லாம் போய் பல் இளிக்கிறது — என்று கருதக் கூடும். "டில்லி" பார்லிமெண்டில் டிச: 6-ந்தேதி நடைபெற்ற ஒரு விவாதம், இந்த நம்பிக்கையிலும், மண்ணைப்போடுகிறது.

**சிறு செலவினங்களில் மட்டுமல்ல, பெரிய விஷயங்களிலும் கூட, பணம் விரயமகிக்கொண்டே யிருக்கிறது!!**

இந்த உண்மையை, நமது சம்பத்தோ, தர்மலிங்கமோ, பார்லிமெண்டில் எடுத்துக் கூறினால், இல்லை! பொய்! என்று மறுக்க முடியும். நேரு அவர்களுடைய திருமகன் பிரோஸ் காந்தி, எடுத்துரைத்திருக்கிறார். அவர், காங்கிரசிலிருப்பவர். அவர், இந்த ஊழலை எடுத்துக்காட்டி, கண்டன மாரி பொழிந்திருக்கிறார்.

ஒரு இலட்சம், இரண்டு லட்சமல்ல ஒன்றரைக் கோடி ரூபாய், வீணாக்கப்பட்டிருக்கிறதாம். அதுவும், இந்த ஒன்றரைக்கோடி ரூபாயும் எப்படி வீணாக்கப்பட்டதாம் தெரியுமா?

**பொதுமக்களின் பணத்தை எடுத்து, முந்த்ரா என்கிற ஒருதனிப்பட்ட முதலாளிக்கு அளித்திருக்கிறார்கள்.**

டால்மியா மோசம் செய்கிறார்—இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் மூலம் வருமானம் பெற்று 'ஏப்பம்' விடுகிறார்—இதுபோன்ற நடவடிக்கைகளைத் தடுக்கவேண்டும் என்பதற்காகவே, இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளைச்சர்க்காரேஎடுத்துக் கொண்டது.

சர்க்கார் மேற்கொண்ட காரியம் சரியாக நடக்கும், என்று எல்லோரும் இந்நடவடிக்கையைப் பாராட்டினார்கள்! நாமும், பாராட்டி எழுதினோம்!

இப்போது சர்க்காரின் மேற்பார்வையில் இயங்கி வரும், இன்ஷியூரன்ஸ் கார்ப்பரேஷன் பாலிசிதார்கள் மூலம் தன்னிடம் சேர்ந்திருக்கும் பணத்தைக் கொண்டு ஒரு கம்பெனியின் 'பங்கு'களை விலைக்கு வாங்கியிருக்கிறது.

மதிப்பில்லாத
கம்பெனி.
போட்ட பணம்
வராது.

என்கிறார், பிரோஸ் காந்தி! ஒன்றரைக் கோடி ரூபாய் — ஒரு ஆலை அமைக்கலாம் தென்னாட்டில் — இவ்வளவு ரூபாயையும் 'முந்த்ரா கம்பெனி' எனும் அக்கம்பெனிக்குக் கொட்டியிருக்கிறார்கள்!

ரிசர்வ் பாங்க் எச்சரித்ததாம் வேண்டாம் என்று,

தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் கூட 'வேண்டாம்' என்றதாம்.

எனினும் இவைகளை மீறி, இன்ஷியூரன்ஸ் கார்ப்பரேஷன், அந்தக் கம்பெனியின் 'பங்கில்' ஒன்றரைக்கோடி ரூபாய் போட்டிருக்கிறது!

**ஒரு முதலாளிக்கு வேண்டுமென்றே செய்யப்பட்ட சலுகை**

என்கிறார், பிரோஸ்காந்தி! ஒன்றரைக்கோடி ரூபாய் — ஒரு முதலாளிக்கு!!

ஏழைகள் அழுகிறார்கள் — அவர்களது கண்ணீரைத் துடைக்கப் பணமில்லையென்று கதறுகிறார்கள்—ஆனால், சர்க்கார் ஒரு முதலாளிக்கு இவ்வளவு பெரிய தொகையைத் 'தானம்' அளிக்கிறது! திரும்பி வராதெனத் தெரிந்தும் அளிக்கிறது!!

நிதி இலாகாவுக்குப் பொறுப்பானவரும், அமெரிக்காவெல்லாம் ஓடிப்பணத்துக்கு அலைந்தவருமான டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஏதேதோ சமாதானம் சொல்லித் தப்ப முயன்றிருக்கிறார் — எதிர்க்கட்சிக்காரர்கள் மட்டுமின்றி காங்கிரஸ் ஆட்களும் கண்டனக்கணைகளைப் பொழிந்தனராம்.

எவருக்குத்தான் மனம் பொறுக்கும்? சில்லரை விஷயங்களில்கூட சிக்கனம் வேண்டும் என்று சொல்கிறார்கள். சரி — சொன்னபடி, சில்லரை விஷயத்தில்தான் நடக்கவில்லை; பெரிய 'இனங்'களிலாவது சாக்கிரதையாக இருப்பார்கள் என்று பார்த்தால், அதிலும் இப்படி ஓட்டை விழுந்து கொண்டே உள்ளது.

இந்த இலட்சணத்தில் இரு கிழமைகளுக்கு முன், டி. டி. கே. பார்லிமெண்டில் தெரிவித்திருக்கிறார்,

**"ஐந்தாண்டுத் திட்டத்துக்குத் தேவையான வெளி உதவி கிடைக்கும் அறிகுறி தெரியாததால், அடுத்த ஆண்டில், மத்ய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும், புதிய வரிகளைப் போடும்படி நேரலாம்,"**

என்று! புதிய வரிகள் போட நேரலாமாம்—கட்டும் வரி, இப்படியெல்லாம் கரியாகும். மக்கள் மட்டும், தவறாது, புதுப்புது வரிகளைக் கட்டிக்கொண்டிருக்க வேண்டும்போலும்! உள்ளபடியே, காங்கிரஸ் ஆட்சியின் போக்கைப் பார்த்தால், கண்ணீரும் ஆத்திரமும் கலந்து கலந்து வரத்தான் செய்கிறது!!

★


# பொங்கல் மலர்

## விற்பனையாளர்களுக்கு

இந்த ஆண்டுப் பொங்கல் மலர் வழக்கம்போல் 14—1—58-ல் வெளிவருகிறது.

**விலை:- எட்டணா**

ஏஜண்டுத் தோழர்கள் தங்களுக்குத் தேவையான மலர் எவ்வளவென்பதை 20—12—57-க்குள் தெரிவிப்பதுடன், மலருக்குரிய தொகை முழுவதையும் (கழிவு 25% நீக்கி) 28—12—57-க்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்கவேண்டும். அதோடு டிசம்பர் பட்டியல் பாக்கி முழுவதையும் 10—1—58-க்குள் அனுப்பவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பொறுப்பாளர்.**

குறிப்பு:— மலர் ஒன்றுக்கு 12 புதிய காசு கழிவு போக மீதி 38 காசு வீதம் கணக்கிட்டு முழுத் தொகையையும் அனுப்பிவைக்கவும்.

# அரசனுகும் ஆண்டி!

M. S. வெங்கடாசலம், M. A.,

பண்டிதநேருவும் பண்டாரநாயக்காவும் கூடினர்கள்—பேசினர்கள்! இறுதியிலே ஒரு முடிவுக்கும் வந்திருக்கிருர்கள்.

அப்படியானல் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்ந்துவிட்டதா — அவர்களது அல்லலுக்கு விடிவுகாலம் ஏற்பட்டுவிட்டதா— என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு.

ஆனல் முடிவுக்கு வந்தது அந்த விஷயத்திலல்ல! பண்டித நேருவே ஒப்புக்கொள்ளுகிருர்; "அந்தப் பிரச்சினையிலே முடிவு காண்பதற்கு நாம் செல்லவேண்டிய தூரம் இன்னும் எவ்வளவோ இருக்கிறது" என்று!

இந்த அகண்ட :பாரதத்தைப் போல் இலங்கையும் ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப் போகிறதாம்! அந்தத் திட்டங்கள் வெற்றி பெற டில்லி உதவி செய்யக் காத்திருக்கிறதாம்!!

இலங்கை திட்டங்கள் போடட்டும்—அவற்றில் வெற்றி பெறட்டும்—வாழ்த்துகிருேம்.

நமக்கு வேடிக்கையாகத் தோன்றுவதெல்லாம் "நீங்கள் போடும் திட்டங்கள் வெற்றிபெற எங்களாலான உதவியைச் செய்யச் சித்தமாக இருக்கிருேம்" என்னும் பண்டிதரின் உறுதிமொழிதான்!

நேரு சர்க்கார் தீட்டிய திட்டங்களுக்கே ஆண்டி கட்டிய மடத்தின் நிலை ஏற்பட்டுவிட்டது! இந்த ஆண்டி எங்கே, எப்படி மற்றவர்களுக்கு உதவி செய்வது?

போடப்பட்ட திட்டத்தில் எந்தப் பகுதி முக்கியம், எந்தப்பகுதி முக்கியமல்ல, எந்தப் பகுதியை இயற்றிட முடியும், எந்தப் பகுதி கைவிடப்பட வேண்டியது என்ற விவாதம் நாளுக்கு நாள் உச்ச நிலையை அடைந்தவண்ணம் உள்ளது.

இதற்கிடையில் "ஐயா, ஆதரவு தாரீர், அது இன்றேல் எங்களுக்கு வாழ்வில்லை; வளமில்லை" என்ற அபயக்குரல்! — நாள் தோறும்!!

அரசாங்கத்தின் சார்பில் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் சென்று அந்தக் குரலை எழுப்பினர் கிருஷ்ணமாச்சாரி!

ஆலை அதிபர்கள் சார்பில் பிர்லா சென்று அதே குரலை எழுப்பிவிட்டு மீண்டிருக்கிருர்!!

துறைமுக அபிவிருத்திச் செலவுக்கென்று ஐ. நா. சபையிடம் 38-கோடி கடன் கேட்டிருக்கிறது, டில்லி அரசாங்கம்.

வேறு ஏதோ 75-திட்டங்களைக் காட்டி சர்வதேச கூட்டுறவு நிர்வாகக்குழுவின் உதவியையும் நாடியிருக்கிறதாம், இந்த சர்க்கார்.

**இந்த அளவுக்கு, அங்கிங்கெனுதபடி எங்கெங்கும் சென்று கடன் கேட்டுக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் ஸ்டர்லிங் சேமிப்பிலிருந்து 1956-ம் ஆண்டு ஏப்ரல் முதல், 1957-ம் ஆண்டு அக்டோபர் முடிய 418-கோடி ரூபாய் எடுக்கப்பட்டிருக்கிறது.**

முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்திலிருந்து இதுவரை எடுக்கப்பட்ட தொகை 138-கோடி ரூபாய்.

இந்த முறையிலே எடுக்கப்பட்ட தொகைதான் இந்த 418-கோடி ரூபாய்.—ஒரு ஆண்டுக்குள்!—அதிலும் பெரும் பகுதி, திட்டம் நிறைவேற்றப் படுவதற்காக!!

**எனவே இலங்கையின் திட்டங்களுக்கு உதவுவதானல், இந்தியா நிதி கொடுத்து உதவ முடியாது!**

**உயர்தர நுண்ணியல் சாதனங்கள்' நிபுணர்கள் மூலம், இயலுமா என்றல், அந்த விஷயங்களிலும் இங்கேயே பஞ்சம்!**

நுண்ணியல் கருவிகள் பலவற்றை இறக்குமதி செய்யும் போதே, அவற்றை இயக்கத் தெரிந்தவர்களையும் இங்கே இறக்குமதி செய்கிருர்கள்!

மூன்று இரும்பு ஆலைகளுக்கும் வெளிநாட்டு நிதியுதவியோடு தொழிலுதவியும் சேர்த்துத்தான் கிடைத்திருக்கிறது!

**ரூர்கலாவில் ஜெர்மனியப் பொறியியல் வல்லுநர்கள்.**

**பிலாய் ஆலையில் ரஷ்யாவைச் சேர்ந்த நிபுணர்கள்.**

**துர்காபூர் ஆலையில் இங்கிலாந்து நாட்டு நுண்ணியல் நிபுணர்கள்.**

இப்படி இந்த நாட்டில் இருக்கிற நுண்கலைப் பஞ்சத்தில், நிபுணர் பஞ்சத்தில், **எதை அல்லது யாரை அனுப்பி பண்டிதர், பண்டார நாயக்காவின் திட்டங்களுக்கு உதவப் போகிருர்?**

அல்லது இப்படி இப்படி திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்—திட்டங்கள் தீட்டப்படுவதற்கு முன்னல் நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயங்கள் இவையிவை — திட்டங்களுக்கு முக்கியமெனக் கருதப்படும் புள்ளி விவரங்கள் இன்னின்ன முறைகளில் சேகரிக்கப்படல் வேண்டும் —என்பன போன்ற அரும்பெரும் யோசனைகளையாவது பண்டிதர் வழங்க இயலுமா என்றல் அதுவும் இல்லை!

காரணம் இவையெல்லாவற்றிலுமே, பண்டித நேரு கொண்டுள்ள கொள்கையும் நடந்துள்ள பாதையும் திட்டங்களின் வெற்றிக்கு எந்தவிதத்திலும் துணை நிற்பன அல்ல!

"உங்கள் நல்வாழ்வுக்கு என்னென்ன திட்டங்கள், அடிப்படைத் திட்டங்கள் தேவை— அவற்றில் விரைவிலே இயற்றப் படவேண்டியவை எவை, மெள்ளச் செய்து முடிக்கப்பட வேண்டி

யவை எவை" என்று மக்களையோ அல்லது மக்கள்தம் பிரதிநிதிகளையோ கேட்டு, திட்டம் தீட்டப்பட்டிருக்க வேண்டும்!

அவ்விதம் செய்யவில்லை நேரு சர்க்கார்! திட்டக் குழு என்றொரு குழுவை அந்தச் சர்க்கார் நியமிக்க, அந்தக் குழு, அறைக்குள்ளே அமர்ந்து கொண்டு, தேசப் படத்தையும் முன்னாலே வைத்துவிட்டு, அங்கே என்ன திட்டம் போடலாம், என்று கணக்கு ஆராய்ச்சி செய்யவில்லை! —கணக்கெடுத்தது!

திட்டங்கள் தீட்டப்படுவதற்கு முன்னாலே கவனிக்கப்பட வேண்டியதென்ன? நாட்டின் எந்தெந்தப் பகுதியிலே எந்தெந்த மூலப் பொருள் கிடைக்கும் என்பதையும் அந்த மூலப் பொருளைப் பயன்படுத்துவதற்கு எவ்வளவு மூலதனம் தேவை என்பதனையும் கணக்கிட வேண்டும். திட்டங்கள் நாட்டின் நிலைமைக் கேற்பவும்—மூலப் பொருள்களனைத்தையும் நல்ல முறையில் பயன்படுத்தும் வகையிலும்—அமைந்திட வேண்டும்!

அமைந்திருக்கின்றனவா, நம் 'அகண்ட பாரதத்'தின் ஐந்தாண்டுத் திட்டங்கள்?

நிதி நிலைமைக்கேற்றவாறு அமையவில்லையென்பதற்கு நற்சான்றுதான், நாள்தோறும் இங்கிருந்து எழுகின்ற அபயக் குரல்கள்!!

மூலப்பொருள்களனைத்தையும் நல்ல முறையில் பயன்படுத்தும் வகையில் திட்டம் அமையவில்லையென்பதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளம் கொடுத்திட இயலும்! ஆனாலும் 'அப்சரஸ்' ஒன்றே போதும் அதனை விளக்கிட! அணு ஆலைகளுக்கு வேண்டிய மூலப்பொருள் கிடைப்பது கேரள மண்ணில்! ஆனால் 'அப்சரஸ்' என்ற அந்த அணு ஆலை நிறுவப்பட்டிருப்பதோ பம்பாய் மாநிலத்தில்!!

திட்டங்களுக்கு முக்கியமெனக் கருதப்படும் புள்ளி விவரங்களின் நிலை என்ன? "நம்புகிற நிலையிலே அவை இல்லை" என்று பாராளுமன்றத்திலேயே எத்தனையோ பேர் பேசிவிட்டார்கள்!

**"திட்டங்கள் மூலம் எங்களுக்கு நீங்கள் உணவைத் தரவில்லை — புள்ளி விவரத்தைத்தான் தந்திருக்கின்றீர்கள்"** (We are fed on with statistics rather than with food) என்று பிராங் அந்தோனி என்பவர் கிண்டல் செய்திருக்கிறார்!!

எனவே பண்டாரநாயகாவின் சர்க்காருக்கு திட்டங்கள் தீட்டித் தரவோ, அல்லது அதற்கான யோசனைகள் கூறவோகூட இயலாத நிலையிலிருக்கிறார் நேரு பண்டிதர்! இந்த இலட்சணத்தில் இலங்கைக்கு உதவி செய்யத் தயாராயிருக்கிறாராம்!!

ஆண்டி அரசனாகும் நிகழ்ச்சியை கதைகளில்தான் படித்திருக்கிறோம். இதோ, 'இந்தியா' இருக்கிறது என்கிறார், நேரு பண்டிதர்.

வீண் பெருமைக்காக இப்படிக் கூறிவிடுவது, நேரு பண்டிதருக்கு சகஜம். இதனால்தான் இரண்டாண்டுகளுக்கு முன்பு 'பர்மா'வுக்குக் கூட உதவி அளிக்கக் கிளம்பினார் நேரு. பலன், பல கோடி ரூபாய் டில்லி கஜானாவில் காலி!!

வாங்குவது பிச்சை! இதில் தான தர்மத்துக்கும் குறைச்சலில்லை!!

# ஆசிரியக் குரல்!

அன்புள்ள ஐயா,

கோனாட்சி முறையிலே தனிப்பட்ட மனிதரின் குரலுக்கு மதிப்பிருந்தது. எத்தகையவராய் இருப்பினும், எந்நிலையிலிருப்பவராயினும், அரசனிடம் முறையிடின், கவனிக்கப்பட்டு நிறை செய்யப்பட்டதாக தமிழ் இலக்கியங்களிலே காண்கிறோம். ஆனால் குடியாட்சியிலோ. தனி மனிதனின் குரலுக்கோ, கொள்கைகளுக்கோ செவி மடுப்பார் யாருமில்லை. இயக்க ரீதியில் சங்கம் என்ற முறையில் கோரிக்கைகளை வற்புறுத்தினால், ஓரளவு அவைகளைச் சமுதாயமும் அரசாங்கமும் கருத்தில் கொள்ளுகின்ற நிலையே இன்றிருக்கிறது.

இதை நன்குணர்ந்த என். ஜி. ஓ. வினர் சங்கம் அமைத்து கட்டுப்பாடுடன் செயலாற்றினர். சமீபத்திலே சம்பள உயர்வும் பெற்று பல நன்மைகளை அடைந்துவருகின்றனர். அவர்கள் கிளர்ச்சியின் பயனாகச் சம்பள உயர்வில் ஆசிரியர் சமுதாயமும் நன்மை அடைந்துள்ளது. என். ஜி. ஓக்களைப் போலவே தபால், இரயில் ஊழியர்களும் சங்கங்கள் அமைத்து பல நன்மைகள் அடைந்து வருகின்றனர்.

இவைகளையெல்லாம் நோக்க ஆரம்ப ஆசிரியர்களாகிய நாம் ஒன்றுபடாமலிருப்பது ஏன்? நம்முடைய பலத்தை நாம் அறியாததும், பலம் அனைத்தும் பல சங்கங்களாக சிதறிக்கிடப்பதும் ஏன்? 'நான் ஒரு ஆசிரியர்' என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுவதும், சமுதாயத்திலே வாத்தியா...ரா என்ற அலட்சியம் நிறைந்த நெடிலோசை எழுப்பப்படுவதற்கும் காரணந்தான் என்ன? சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றவர்களல்லவா நாம்? அரசாங்கச் சகடம் அமைச்சர்களால் இடையூறின்றி இழுத்துச்செல்லப்படுவதற்கு, ஏற்ற அறிவுப்பாதை உருவாக, உழைத்து உருக்குலைந்தவர்களல்லவா நாம்?

சமுதாய சீர்திருத்த இயக்கங்களும், அரசியல் கட்சிகளும், பல நூற்றாண்டுகளாகச் சாதிக்கமுடியலாதசீர்திருத்தங்களை, செயல்களை, திட்டங்களை நம் சமுதாயம் முயன்றால், சாதிக்க இயலுமே. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் முதல், கல்லூரிப் பேராசிரியர்கள் வரை, தங்களுக்குள் மறைந்து கிடக்கும் ஆற்றலை அறிந்து, தன்னம்பிக்கையுடன் செயலாற்றினால், சமுதாயத்தையே மாற்றி அமைக்க முடியுமே. ஆசிரியர்களைக்கொண்ட இப்படை தோற்கின் எப்படைதான் வெல்லும்? இதைச் சமுதாயமும், அரசாங்கமும் உணராததும், உணர்த்த நாம் முற்படாததும் ஏன்?

நம்மிடத்திலே பயின்று நம்மால் உயர்த்தப்பட்டு இன்று புகழேணியின் உச்சியில் இருக்கும் பொதுநலத் தொண்டர்கள், அமைச்சர்கள், அரசியல் தந்திரிகள், தலைவர்கள் நம் அவல நிலையை எண்ணிப்பார்க்கவில்லை. ஆரம்ப ஆசிரியர்கள்தானே என்ற அலட்சியப் பார்வையை வீசுகின்றனர். ஆசிரிய சமுதாயத்தின் மீது அனுதாபம்கொண்டு, நன்றியுணர்ச்சியுடன், 'அவர்கள் நிலை உயர ஆவன செய்ய வேண்டும்' என்று ஒரு சிலர் சட்ட மன்றத்திலே கேட்டாலும், கட்சி நோக்கத்தோடு கூறுகிறார்கள் அல்லது கதை, கவிதைகள் கற்பனை செய்து எழுதுவது போன்று புனைந்துரை செய்கிறார்கள் என்றல்லவா அரசாங்கம் ஒதுக்கிவிடுகின்றது?

இங்ஙனம்.

**பி. கே. கலியபெருமாள்**

# மாயமும் மந்திரமும்

—[குழலன்]—

தலைவி :- தோழி! அந்த ரோஜா எவ்வளவு அழகாக உள்ளது பார்த்தாயா?

தோழி :- உன் அழகைவிட அதிகமாக அதன் அழகு உள்ளதாக எனக்கு தோன்றவில்லையம்மா.

த :- அந்தக் கருவண்டு பறக்கும் போது அதன் இறக்கைகள் துடிக்கும் அழகு கொள்ளைதானேடி?

தோ :- உன் மான் விழியைப் பாதுகாக்கும் இமைகள் துடிக்கும் போது உண்டாகும் நெளிவின் அழகைவிடவா?

த :- அடியே! நான் இயற்கையின் இன்ப எழிலைச் சொன்னால், நீ, காதலன் காதலியைப் புகழ்வதைப்போல் புகழ்கின்றாயே. உனக்கு வேறு வேலை கிடையாதாடி, வாயாடி!

தோ :- உள்ளதைச் சொன்னால் என்னைத் திட்டச் சொல்லுகிறது உங்களுக்கு.

த :- போடி குறும்புக்காரி, ஏறுமாறான மொழிகளைக் கூறுவதில் உன்னை யார் மிஞ்ச முடியும்? எப்பொழுதும் என்னை கேலி செய்வதுதான் உனக்கு வேலை.

தோ :- நானா, ஏறுமாறான மொழி கூறுகிறேன், வேண்டுமானால் வேறு யாரையாவது கேட்கலாம் இருங்கள்; அவர்கள் எப்படி கூறுகின்றார்கள் பார்ப்போம். அதோ அந்த முதியவரைக் கேட்போம். ஐயா! ஐயா! இப்படி சிறிது வருகிறீர்களா?

த :- அடியே! உனக்கு என்ன மூளை மழுங்கி விட்டதா? யாரோ ஒரு அன்னியரை என் அழகுப் பற்றி எடைபோடும்படி கூறுகின்றாயே. உனக்கு என்ன பைத்தியமா பிடித்து விட்டது.

அன்னியர் :- என்னையா அம்மா அழைத்தீர்கள்.

தோ :- ஆம்! முதியவரே, எங்களுக்குள் ஒரு போட்டி; அந்தப் போட்டியின் முடிவை ஆராய்ந்து நீர் கூறவேண்டும். (கேலியாக) ஆமாம்! இதற்கு முன்,முறையுடன்எங்கேயாவது ஆராய்ந்து நீதி கூறியதுண்டா?

அன் :- அம்மா! உங்கள் போட்டியைக் கூறுங்கள், தக்க முறையில் நீதி வழங்கப் பாடுபடுகிறேன். இதற்கு முன் பல தடவை நான் நீதியுடன் நடந்ததாகத்தான் அனைவரும் கூறிக் கொண்டு இருக்கின்றனர்.

தோ :- சரி! சரி! அதெல்லாம் எதற்கு. இவள் அதோ அங்கு மலர்ந்துள்ள ரோஜா எவ்வளவு அழகுடன் விளங்குகின்றது பார்த்தாயா என்று அதனை புகழ்ந்தனள், நான் சொன்னேன்; உன் அழகைவிட அதன் அழகு மிகுதி இல்லை என்று. பறந்து திரியும் கருவண்டின் சில இறகுகளின் துடிப்பைக் கண்டு மயங்கினள். நான் கூறினேன் உன் மான் விழியை பாதுகாக்கும் இமைகள் துடிக்கும்போது உண்டாகும் மயக்கத்தைவிட மிகையல்லவென்று. இதற்கு இவள் நான் பொய் சொல்லுவதாகவும், புகழ்வதாகவும், ஏறுமாறான மொழிகள் கூறுவதாகவும் பழி சுமத்தினள். நான் கூறியதில் பொய் உண்டா?

அன்னி:- (தலைவியை ஏற இறங்கப் பார்த்து) அம்மா! தாங்கள் கூறியதில் ஒரு சிறிதும் தவறில்லை; கருவண்டின் பளபளப்பும், துடிப்பும் இவள் கண்களில் மிகுதியாக உள்ளன, ரோஜாவின் மென்மையும் அழகும் இவள் அழகுக்கும் மென்மைக்கும் தோற்கின்றன. இவள் அழகு போற்றக்கூடியதே.

த :- (கோபமாக) ஏ! கிழமே, ஒரு அறிவுகெட்ட பெண்ணின் பேச்சைக் கேட்டு மற்றொரு பெண்ணை அவள் உத்தரவு இன்றி எடைபோடுகிறீரே, இதுதான் நீ! நீதி கூறும் முறையோ? யார் நீ? உள்ளதைச் சொல் அரசாங்க வீரர்களிடம் சொல்லி உன்னைச் சிறையில் அடைக்கச் செய்கிறேன்.

அன்:- அம்மா! தங்கள் வார்த்தை அத்தனையும் எனக்குத் தகும். உங்கள் உத்தரவு இன்றி உங்களைப் புகழ்ந்தது தவறே. வேண்டும் என்று வருபவர்களுக்கு எதையும் அளித்து அளித்து என் அறிவு மழுங்கிவிட்டது. என்னை மன்னிப்பீராக. யான் யாரென்று வினவினீர் அதையும் அறிவீராக. (மாற்றுடைகளை களைதல்)

தலைவி : | தோழி : | ஆ! சேர மன்னரா?

தோழி:- மன்ன! ஆத்திரத்தில் தலைவி ஏதேதோ பேசிவிட்டாள்; தவறு என்னுடையதே; என்னைத் தண்டிப்பீராக.

மன்ன:- உங்கள் தலைவி கூறியதில் எள் அளவும் தவறில்லை, யானே தவறுடையேன். என்னை மன்னிப்பீராக. (செல்லுதல்)

தோழி:- ஆத்திரத்தில் அறிவிழந்து யான் செய்த பிழை இவ்வளவு பெரியதாகும் என்று யான் நினைக்கவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள் அம்மா.

தலைவி:- (தனக்குள்ளாக) ஆ! எவ்வளவு அழகு, சாதுரியமான பேச்சு, வீரம் பொருந்திய நடை கள்ளமற்ற உள்ளம்.

தோழி:- வீட்டிற்கு செல்லுவோம் புறப்படுங்கள் அம்மா? (செல்லுதல்)

சுந்தரனும் சேரனைக் கண்டதி லிருந்து தலைவி அவன் நினைவாகவே ஏங்குகிறாள்.

மறுபடியும் இரண்டு மூன்று சோலை சென்றனள்; ஆனால் சேரனைக் காணவில்லை.

அவன் பேரழகில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த தலைவி அவன் நினைவாகவே இருப்பதினால் உணவும் அவளுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் அவள் மெலிந்தனள், உள்ளம் உற்ற மன உலைச்சலின் உடலின் அழகை மேம்படுத்தும் பணியினையும் மறந்தனள். மெலிந்து அழகிழந்து காணப்பட்டனள்.

இதைக் கண்ட அவள் தாய் தன் பெண்ணை "பேய்" பிடித்துக் கொண்டது என்று நினைந்து, அது உண்மையா? என்று கேட்டுத் தெரிய ஒரு மந்திரவாதக் கிழவியை அழைத்து வந்து தன் பெண்ணை அவளுக்கு காட்டினாள்.

மந்திரவாதிக் கிழவியும் அவளுக்குப் பேய் பிடித்து இருக்கிறது என்பதனை உறுதிப்படுத்தி அதைப்போக்க காலை நேரத்தில் வேப்பம் மரத்தின் கீழே, சுத்தம் செய்து நீர் தெளித்து கோலமிட்டு, சாமிபிடித்து பூப்போட்டு பழம்வைத்து பால்விட்டு வெள்ளாட்டின் இரத்தம் தெளித்து, அதன் மேல் பெண்ணை உட்கார வைத்துப் பூஜைபோட்டு பிறகு குளிர்ந்த நீரால் குளிப்பாட்டினால் அவளைப் பிடித்தபேய் பறந்து விடும் என்றனள்.

இதைக் கேட்ட தலைவியின் உள்ளம் நகைத்தது! ஆயின் தாயின் உள்ளமோ நம்பியது!!

குறிப்பிட்ட தினத்தில் காலை மந்திரவாதக் கிழவி சொன்னதை எல்லாம் தன் தாய் செய்து கொண்டுஇருப்பதையும் காராட்டு உதிரத்தைத் தெளிப்பதையும் கண்டனள்.

அச்சமயத்தில் தன் தோழி அங்குவர, அவளிடம் தான் சேரன்மீது கொண்ட காதல் மந்திரத்தாலும் மாயத்தாலும் நீங்குமோ? என்னும் பொருள்படக் கூறுகின்றாளாம்.

காராட்(டு) உதிரம் தூஉய்,
அன்னை களன் இழைத்து,
நீராட்டி நீங்கென்றால்
நீங்குமோ? போராட்டு
வென்று களங் கொண்ட
வெஞ்சின வேல்க் கோதைக்(கு) என்
நெஞ்சு களங் கொண்ட
நோய்.

இது "முத்தொள்ளாயி"த்தில் உள்ள ஒரு அழகு மிக்க பாடல்.

*


நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக

**2-வது மாநாடு**

டிசம்பர் 27, 28-ம் நாட்களில்

நாகர்கோவிலில் நடைபெறும்.

| டில்லி பாராளுமன்ற உறுப்பினர் | மதுரை டாக்டர் |
| --- | --- |
| **ஈ. வெ. கி. சம்பத்** | **எஸ். அருணாசலம்** |
| தலைமை தாங்குகிறார் | மாநாட்டைத் திறந்து வைக்கிறார் |

**அண்ணா,** பொதுச்செயலாளர் **நெடுஞ்செழியன்**

மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்கின்றனர்.

இரு நாட்களிலும் இசை அரங்கு, நாடகம் ஆகியவை உண்டு.

வரவேற்புக்குழு.


காஞ்சீபுரம், 9ஏ, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.